பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 02 | திங்கட்கிழமை 17.12.2018 | கதிர் 42


**இது ரகசியம் அல்ல!**

கடந்த ஐம்பது நாள்களாகத் தாம் 'வெட்டிப் பிடுங்கிய' அரசியல் சாதனைகளுக்காக நேற்றுத் தமக்குத் தாமே Certificate கொடுத்துக் கொண்டார் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன.

ஓரளவு அரசியல் ஞானம் தெரிந்தவர்களுக்கு அவரது உரை சிரிப்பாக இருந்தி

பக்கம் 02

# மீண்டும் அரியணை ஏறினார் ரணில்!

## மைத்திரி - மஹிந்த கூட்டணியின் சர்வாதிகாரத்துக்கு முடிவு கட்டி



கொழும்பு, டிசெ. 17

சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்க - இலங்கைவாழ் மக்கள் ஆவலுடன் எதிர்பாத்துக்கொண்டிருக்க, '2018 ஒக்டோபர் 26' அரசியல் சதித் திட்டத்துக்கும் மைத்திரி - மஹிந்த கூட்டணியின் சர்வாதிகார ஆட்டத்துக்கும் முடிவு கட்டி மீண்டும் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் பதவியேற்றுக் கொண்டார்.

பக்கம் 11

# அரசில் சேர விரும்பும் எம்.பிக்கள் அனைவரையும் அரவணையுங்கள்!

## பிரதமர் பதவி ஏற்க முன்னர் தம்மைத் தேடி ரணில் வந்தபோது சம்பந்தன் ஆலோசனை

கொழும்பு,டிசெம்பர் 17

"ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைந்து செயற்படுவதற்கு ஏனைய கட்சிகள், தரப்புகளில் இருந்து வரும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரவணைத்துக் கொள்ளுங்கள். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு அனைவரினதும் ஆதரவு எமக்குத் தேவை."

பக்கம் 11

## குட்டி பட்ஜெட் டிசெ.26 சபையில் முன்வைப்பு!

கொழும்பு, டிசெ. 17

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில்

பக்கம் 11

## ரணில் முன்வைத்த புதிய அமைச்சரவை

கொழும்பு, டிசெ. 17

புதிய அமைச்சரவையின் பட்டியலை ஜனாதிபதி மைத்திரி

பக்கம் 11

## பிரதமர் ரணிலின் செயலராக மீண்டும் சமன் ஏக்கநாயக்க



கொழும்பு, டிசெ. 17

பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க மீண்டும்

பக்கம் 11

## இலங்கையில் ஆட்சி மாற்றம்: வரவேற்கின்றது இந்திய அரசு

### 52 நாட்களின் பின் கலைந்தது மௌனம்

கொழும்பு, டிசெ. 17

இலங்கையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத்

பக்கம் 11

## மாகாண சபைகளுக்கான தேர்தல் 2019 ஆரம்பத்தில்

### ஐ.தே.க.வினருக்கு ரணில் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

2019ஆண்டு ஆரம்பத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு

பக்கம் 11

## வியாழேந்திரன் ரணிலின் பக்கம்

கொழும்பு, டிசெ. 17

மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் தாவி பிரதி அமைச்சராகப்

பக்கம் 11

## தனிப்பட்ட ரீதியில் நான் ரணிலை வெறுக்கிறேன்

### மீண்டும் சர்ச்சை கிளப்புகிறார் மைத்திரி

கொழும்பு, டிசெ. 17

நாடாளுமன்ற மரபுகள் மற்றும் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்தே, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்தேன் என்று ஜனாதிபதி மைத்திரி

பக்கம் 02

## நீதி கிடைக்கப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றிகள்

### நாட்டைக் கட்டியெழுப்புவோம் என ரணில் சபதம்



கொழும்பு, டிசெ. 17

நாடாளுமன்றம், நீதிமன்றம் என்பன நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நடுநிலையுடன் செயற்பட்டன. இது மக்களுக்குக் கிடைத்த நீதி. இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகளைத்

பக்கம் 11

## கூட்டமைப்புக்குக் கோடி நன்றி தமிழ் மக்களுக்குத் தீர்வு உறுதி



### ரணிலின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என சஜித் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 12

எதேச்சதிகாரத்துக்கு எதிரான எமது ஜனநாயகப் போராட்டம் நீதித்துறையின்

பக்கம் 11

## ஜனாதிபதி தலைமையில் மன்னாரில் நத்தார் விழா!



மன்னார், டிசெ. 17

'கிறிஸ்து பிறப்பும் நத்தாரின் சிறப்பும்' என்னும் தொனிப்பொருளில் தேசிய

பக்கம் 02

## ரணிலின் காலைவாரி வெளியேறியோர் மீளவும் ஐ.தே.கவுக்குள் நுழையமாட்டார்

### பஸில் ராஜபக்ஷ நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 17

மஹிந்தராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மீண்டும் அந்தக் கட்சிக்குச்

பக்கம் 11

## பதவியை இழக்கிறார் சம்பந்தன்? எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த

கொழும்பு, டிசெ. 17

அரசியல் சதியின் மூலம், பெற்றுக்கொண்ட பிரதமர் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதில்

பக்கம் 02

## ரணிலுக்கு நாமல் வாழ்த்து!

கொழும்பு, டிசெ. 17

புதிய பிரதமராக நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்

பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikkathir



# 50, 000 வீட்டுத்திட்ட நிதியுதவி இந்தியாவுக்கே திரும்பியுள்ளது

## மன்னாரில் கூறினார் ஜனாதிபதி

அரசியல்வாதிகளின் முரண்பாடுகளால் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 ஆயிரம் வீட்டுத் திட்ட நிதி இந்தியாவுக்குதிரும்பிஅனுப்பப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வருடா வருடம் தேசிய ரீதியில் கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்பு நிகழ்வு மற்றும் ஒளிவிழா நிகழ்வானது 'கிறிஸ்து பிறப்பும் நத்தாரின் சிறப்பும்' எனும் தொனிப்பொருளில் நேற்று மதியம் மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமது நாட்டிலே சமாதானம், நல்லிணக்கத்துக்கு இந்த கிறிஸ்தவ கத்தோலிக்க போதனை மிக மிக முக்கியமானது. எனவே தேச ஒற்றுமைக்கு மாத்திரம் அல்ல பல்வேறு துறைகளுக்கும் இது முக்கிய அங்கம் வகிக்கின்றது.

எனவே தாய், தந்தை, பிள்ளை மாத்திரம் அல்ல சமூகத்திலே எல்லாத்துறைகளுக்கும் இந்த சமாதானம் மிக மிக அவசியம்.

சமாதானத்திற்காக எங்களை நாங்கள் அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். எல்லோர் மத்தியிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். சமாதானம் நல்லிணக்கம் முக்கியமாகின்ற பல விடயங்கள் இருக்கின்றன.

அதனை வெறுமனே உரைகளின் ஊடாக மாத்திரம் திருப்தியடைய முடியாது. எனவே வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் இருக்கக்கூடிய அபிவிருத்தி ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. அதற்கான தீர்வை பெற்றுக் கொடுக்கவேண்டும். எமது நாட்டிலே நீண்ட காலமாக யுத்தம் இடம் பெற்ற காரணத்தினால் தற்போது சமாதானத்தின் தேவை எங்களுக்கு நன்றாக தெரிகின்றது.

நாங்கள் கடந்த நான்கு வருடகாலமாக இந்த நாட்டிலே அபிவிருத்தி மாத்திரம் அல்ல சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக கடமையாற்றியுள்ளோம். வடக்கு– கிழக்கிலே வாழ்கின்ற மக்களுக்கு அபிவிருத்திகள் மிக முக்கியமாக காணப்படுகின்றன.

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவுக்கு முன் னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் மூத்த புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நாமல் எம்.பி. தனது 'டுவிட்டர்' தளத்திலேயே வாழ்த்துத் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க மேற்கத்தேய நாடுகளுக்காகச் செயற்படாமல் நாட்டு மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம் எனவும் நாமல் எம்.பி. அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பதவியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோல்வி கண்ட, மஹிந்த ராஜபக்ஷவின் கவனம் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீது திரும்பியுள்ளது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதான எதிர்க்கட்சி என்ற தகைமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர், அவரது தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்தவே பணியாற்றுவார் என்று தெரிவித்துள்ளனர்.

மஹிந்த எதிர்க்கட்சித் தலைவாகவும், தினேஷ் குணவர்த்தன பிரதம எதிர்க்கட்சி கொறடாவாகவும் செயற்படுவார்கள் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திசநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் றோகித அபேகுணவர்த்தனவும், இதனை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தார். ஐக்கிய தேசிய முன்னணியுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எந்த உடன்பாடும் வைத்துக் கொள்ளாது என்றும், தனிநபர்களாக யாரேனும் அந்த அரசுடன் இணைந்து கொள்ளலாம் என்றும் ஜனாதிபதியும் கூறியிருந்தார்.

கூட்டு அரசில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இடம்பெறாவிடின், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இரா.சம்பந்தன் வகிக்க முடியாத நிலை ஏற்படும்.

எனினும், மஹிந்த ராஜபக்ஷ சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குத் தாவியதால், அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற முடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்த விடயத்தில் சபாநாயகரே முடிவெடுப்பார் என்பதால், நாளை நாடாளுமன்றம் கூடும்போது, இந்த விவகாரம் சூடுபிடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## தனிப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர், அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் முன்னிலையில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

225 உறுப்பினர்கள் ஆதரவு அளித்தாலும் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று நான் முன்னர் கூறியது, எனது தனிப்பட்ட அரசியல் கருத்து. அதில் எந்த மாற்றமும் இல்லை.

இருந்த போதும், நாடாளுமன்ற மரபுகள் மற்றும் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்தே, ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தேன்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிய போதும், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானியை வெளியிட முன்னரும், சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தியிருந்தேன்.

பிரதமரை நியமிக்கும் அதிகாரம் அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்திற்கோ நீதிமன்றத்திற்கோ இல்லை. அத்தகைய அதிகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கே உரித்துடையது. 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்குமாறு தெரிவித்ததாலும் வாக்கெடுப்பின்போது அந்தக்கருத்திற்குப் பெரும்பான்மை கிடைத்ததாலும் நாடாளுமன்றச் சம்பிரதாயத்திற்கு மதிப்பளிக்கின்ற தலைவர் என்றவகையில் நான் அந்த முடிவுக்கு உடன்பட்டேன்.

நாடாளுமன்றத்தை கலைத்தல், ஒத்திவைத்தல், பிரதமரை நீக்குதல், புதிய பிரதமரை நியமித்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் எனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் எடுக்கவில்லை. நாட்டின் உயர் பதவியில் இருக்கும் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றதன் பின்னரே நான் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

அரசமைப்பிற்கு முரணாகச் செயற்படும் எவ்வித எண்ணமும் எனக்கு இருக்கவில்லை.

நாட்டில் ஏற்பட்டிருந்த சிக்கலான அரசியல் நிலைமைகளை தீர்த்துக்கொள்வதற்கு பொதுத் தேர்தலுக்குச் செல்வதே சிறந்தது என்று நான் நம்பினேன். 122 நாடாளுமன்ற உறுப்பினர்களை விட 155 இலட்சம் வாக்காளர்களின் வாக்குகளின் மூலம் ஏற்படும் முடிவை நாடும் உலகமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இருக்கும் என்பதால் 155 இலட்சம் வாக்காளர்களுக்கு அதிகாரத்தை வழங்கும் வகையில் வர்த்தமானியை வெளியிட்டேன்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழலின் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கும் அந்தப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான இலஞ்ச ஆணைக் குழுவின் குறித்த சுற்றறிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல், நாடாளுமன்றத்தைக் காலவரையின்றி ஒத்திவைத்தல், தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிட்டிருந்தாலும் அமைச்சரவைகளை பிரிக்கும்போது அறிவியல் அடிப்படையை பின்பற்றாமை, மத்திய வங்கி பிணைமுறி ஊழல் மற்றும் அதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை அமுல்படுத்தாமை மற்றும் பிக்கு சமூகத்தை இழக்கும் நிலையை தோற்றுவித்தல், இராணுவ வீரர்களைச் சிறைப்படுத்தல் போன்ற தொலைநோக்கற்ற பல செயற்பாடுகளைக் கடந்த நான்கு வருடங்களாக அரசு மேற்கொண்டு வந்தது. அதனால் நான் மனவருத்தத்துடன் காலங் கழித்தேன். அண்மையில் மேற்கொண்ட அரசியல் முடிவுகளுக்கு அவ்வாறான நிலைமைகளே தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன.

யார் எவ்வகையான அறிக்கைகளை வெளியிட்டாலும் கடந்த சில வாரங்களாக என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முடிவுகளும் நாட்டினதும் மக்களினதும் நன்மைக்காக எடுக்கப்பட்ட முடிவுகள்.

என்னைச் சிறையில் அடைத்தாலும் உன்னத எண்ணத்தினால் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் என்னால் எடுக்கப்பட்ட சரியான முடிவுகள் கல்லில் செதுக்கிய எழுத்துக்களாக வரலாற்றில் பொறிக்கப்படும்.

கடாபியை போன்று என்னையும் இழுத்து சென்று கொலை செய்ய வேண்டும் என்று அண்மைக்காலங்களில் சில பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர். ஜே.ஆர். ஜெயவர்தன காலம் முதல் அதன் பின் ஆட்சியமைத்த எந்தவொரு தலைவருக்கும் அவ்வாறான சொற்பிரயோகங்களை எவரும் முன்வைத்ததில்லை. அவ்வாறு கருத்து தெரிவித்திருந்தால் முகங்கொடுக்க நேரும் துர்ப்பாக்கிய சம்பவங்களை அவர்கள் நன்கு அறிவார்கள். இன்று எனக்கு அவ்வாறான சொற்பிரயோகங்கள் முன்வைக்கப்படுவதற்கான காரணம், நான் நாட்டில் உருவாக்கிய சுதந்திரமும் ஜனநாயகமுமே.

இவ்வாறான சம்பவங்களுடன் பிரச்சினைகளின்றி நாட்டின் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது எனது குறிக்கோள். சிக்கல்களை தோற்றுவிப்பதால் நாடு பின்னடைவை எதிர்நோக்கும் . எதிர்கால நாட்டுக்கு ஊழலற்ற பொறிமுறை ஒன்று அவசியம்– என்றார். (ஐ)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நத்தார்விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை மன்னாரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்துவ மத அலுவல்கள் அமைச்சின் ஏற்பாடில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டமையுடன், கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் வின்ஸ்டன் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோரும் பங்கேற்றனர்.

இவர்களுடன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுனர் றெஜினோல்ட் குரே, மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ. மோகன்றாஸ் மற்றும் சர்வமதத் தலைவர்கள், அருட்சகோதரர்கள், அருட் சகோதரிகள், திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கிறிஸ்து பிறப்பு மற்றும் நத்தார் பாடல் நிகழ்வுகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிறிஸ்மஸ் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும்.

'கணக்குப் பிள்ளை பேசக் கூடாது. கணக்குப் புத்தகம் பேச வேண்டும்.' என்பார்கள். அது போல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஐம்பது நாள்களாக வெட்டிப் பிடுங்கிய சாதனைகளை அவர் தமக்குத் தாமே பெருமையாகக் கூறிப் பீற்றிக் கொள்வதில் அர்த்தமில்லை. அவை உண்மையில் நாட்டுக்கு நியாயம் செய்யும் நோக்கில் எடுக்கப்பட்டிருந்தால் நிச்சயம் மக்கள் அதை வரவேற்பார்கள். இந்தக் கணக்குப்பிள்ளையின், இந்த வாய்ச் சவடால் பேச்சுகளுக்கு சரியான கணக்கை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அவருக்குக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

நேற்று பிரதமராக ரணில் பதவியேற்கும் வைபவத்தில் அவர் ஆற்றிய உரை பலரையும் ஆச்சரியப்பட வைத்தது.

கடாபிக்கு ஏற்பட்ட நிலைமையுடன் தன்னை ஒப்பிட்டுப் பேசியமை குறித்து சீற்றத்துடன் எரிந்து விழுந்த ஜனாதிபதி மைத்திரிபால, ஜே.ஆர். – பிரேமதாஸா காலத்திற்கும் பின்னர் வந்த ஜனாதிபதிகளின் ஆட்சி வேளையில் இப்படி யாராவது கூறியிருந்தால் அவர்கள் கதி என்னவாகியிருக்கும் எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

ஜே.ஆர்.காலத்தில் இருந்து 2015 வரை ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகளின் அதிகாரம் வேறு, 19 ஆவது திருத்தம் மூலம் பல அதிகாரங்கள் பிடுங்கப்பட்ட மைத்திரியின் அதிகார நிலை வேறு என்பதை அவர் உணரவில்லைப் போலும்.

அன்று புலிகள் இருந்தார்கள். அவர்களைக் காட்டி எதுவும் செய்யும் அதிகாரத் துஷ்பிரயோக வாய்ப்பு அந்த ஜனாதிபதிகளுக்கு இருந்தது. பாவம், அந்தச் சந்தர்ப்பம் இப்போது மைத்திரிக்கு இல்லை.

மைத்திரியின் இடத்தில் ஜே.ஆரோ, பிரேமதாஸாவோ – ஏன் மஹிந்தரோ கூட – இன்று ஜனாதிபதியாக இருந்திருந்தால் அவர்களும் கூட வன்முறை அத்துமீறலை நாடமுடியாது என்பதுதான் இன்றைய யதார்த்தப் புறச்சூழலாகும். ஆகவே அதனைத் தமது சாதனையாகவோ, பெருமையாகவோ, நற்குணமாகவோ, சீலமாகவோ மைத்திரி காட்ட முயல்வது வேடிக்கையானது.

நான்கு, ஐந்து தடவைகள் புலிகளாலும் ஜே.வி.பியாலும் இலக்கு வைக்கப்பட்டும் கூடத் தாம் தப்பிப் பிழைத்தமையைத் தெய்வ அனுக்கிரகம் போலக் காட்டித் தமது பெருமையாகப் பேசுகிறார் அவர்.

புலிகளின் ஒரே இலக்காக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ கூட இப்படிப் பெருமை பேசமாட்டார்கள். பாவம் மைத்திரி. பேசிவிட்டுப் போகட்டும்.

★ ★ ★

பிரதமராக ரணிலை நியமிக்க முடியாது என்பது தமது தனிப்பட்ட அரசியல் நிலைப்பாடு என்றும் அது இன்னும் நீடிப்பதாகவும் அவர் புலம்பியிருக்கின்றார்.

அவரது தனிப்பட்ட அரசியல் நிலைப்பாட்டை யார் கேட்டது? யார் அது குறித்துக் கவலைப் பட்டது? அவர் அதை வைத்துக் கொண்டிருக்கட்டும்.

ஜனாதிபதி என்ற முறையில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யும்படிதான் நாடும் மக்களும் அவரை எதிர்பார்த்தனர். அதைச் செய்யாமல் – செய்ய மாடடேன் என்று – விதண்டாவதம் பேசிவிட்டு, இப்போது அதை செய்ய வேண்டிய கட்டாயம் – தப்ப முடியாத கட்டாயம் – வந்ததும், முன்னர் கூறியது தனது தனிப்பட்ட கருத்து என்றும், அது நீடிக்கின்றது என்றும் கூறிச் சமாளிக்கின்றார்.

இனிமேல், அவர் கருத்துகளைக் கூறும் போது அது தனிப்பட்ட மைத்திரியின் கருத்தா, அல்லது ஜனாதிபதி மைத்திரியின் கருத்தா என்று கேட்டுத் தெளிவு பெறவேண்டியிருக்கும் போலை...

★ ★ ★

மைத்திரியின் அரசியல் குளறுபடித் திருவிழா முதல் தொடர் முடிந்துவிட்டது. இப்போது அடுத்த தொடர் ஆரம்பித்திருக்கின்றது போல தெரிகின்றது.

அரசமைப்பு ரீதியாகத் தாம் வைத்திருக்க உரிமையற்ற சட்டம், ஒழுங்கு அமைச்சைத் தம் வசம் வைத்திருக்க முடிவு செய்திருக்கின்றார் அவர் என்று தெரிகின்றது.

இனி என்ன? அதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்கும்.

புதிய ஆட்சியை அமைப்பது ஐ.தே.முன்னணி, ஆனால் அதன் விருப்படியன்றித் தமது எண்ணப்படிதான் அமைச்சரவை அமைய முடியும் என்கிறார் ஜனாதிபதி. இது விடயத்தில் பிரதமர் ரணிலின் கருத்தைத் தாம் கவனத்தில் எடுக்கமாட்டார் என்ற தொனியில் அவரது இறுமாப்புப் பேச்சு இருக்கின்றதாம்.

'சொல்லுகின்ற வழியில் சொன்னால்தான் கேட்கின்ற முறையில் கேட்பார்கள்.' – என்று கூறுவர்.

ஜனாதிபதி மைத்திரிக்கும் சொல்கின்ற வழியில் சொன்னால் தான் அவர் கேட்பார் போலும்.

ஆக, உயர்நீதிமன்றம் மூலம் தொடர்ந்து பல விடயங்களை அவருக்குச் செல்ல வேண்டியிருக்கும். அப்போதுதான் அவர் கேட்பார்.

சுமந்திரனுக்குத்தான் வழக்கு வேலை கூடப் போகின்றது...!

- மின்னல்-

# புதிய அமைச்சர்களுக்கு 'கால்கட்டு'



கொழும்பு, டிசெ. 17

புதிய அரசின் அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் குறைக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னைய அரசில் இராஜாங்க அமைச்சராக இருந்த வசந்த சேனநாயக்க அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். வெளிநாடுகளில் அதிகளவு நாள்களைக் கழித்திருந்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து, எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சஜித் பிரேமதாஸ, புதிய அரசில் அவரது வெளிநாட்டுப் பயணங்கள் குறைக்கப்படும் என்று கூறினார்.

புதிய அரசு கிராமங்களை நோக்கிச் செல்வதிலேயே கவனம் செலுத்தும் என்றும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே பிரதானமாகக் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# அரசியல் இலாபத்துக்காக செயற்படுகின்றார் ரணில்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 17

அரசியல் இலாபத்துக்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகிறார்எனமக்கள்விடுதலைமுன்னணியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகப் பதவியேற்றுள்ள நிலையில், கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக தேசிய அரசு என்ற போர்வையில் அரசமைப்பில் உள்ள பலவீனங்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்குச் சாதகமாக ஏற்படுத்த முனைகின்றார்.

நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சி வேறு எந்தக் கட்சியுடனும் இணைந்து தேசிய அரசை அமைக்கலாம் என்பதைப் பிரதமர் ரணில் வெளிக்காட்ட முயல்கின்றார்.

தனது அரசியல் இலாபத்துக்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு செயற்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை மக்கள் விடுதலை முன்னணியினர் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள்–என்றார். (ஐ)

# பிரதமர் ரணிலை வாழ்த்தினார் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.17

இலங்கையின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நஷீத் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.

பிரதமராக நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில், ரணில் பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து டுவிட்டரில் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி தனது வாழ்த்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

இலங்கை தொடர்ந்தும் தனது ஜனநாயகத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதை தாங்கள் அறிவோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துக்கள். இலங்கை தனது சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை நிலைநிறுத்திக் கொண்டிருப்பதை நாம் எப்போதும் அறிந்திருந்தோம்.

அதன் பிரகாரம் தொடர்ச்சியாக நாட்டில் சட்டம் நிலைநாட்டப்பட்டு ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும் என நம்புகின்றோம் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# வவுனியாவில் ஐ.தே.கவினர் மகிழ்ச்சிக் கொண்டாட்டம்



வவுனியா, டிசெ. 17

புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றமையை அடுத்து வவுனியாவில் ஐக்கிய தேசியக் கட்சியினர் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணாதாஸ தலைமையில் தினச் சந்தைக்கு முன்பாக ஒன்றுகூடிய ஐக்கிய தேசியக் கட்சியினர் பட்டாசு கொளுத்தியும், பாற்சோறு கொடுத்தும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதன்போது வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.ஜெயதிலக்க மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஐ.தே.க. உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# ஜனநாயகப் பாதையில் கூட்டமைப்பு இதனால் தோல்வி கண்டார் மஹிந்த!

## ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, டிசெ. 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகத்தின் பாதையில் சென்றதாலேயே மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சித்தாண்டியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கிளை புனரமைப்பது தொடர்பான கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்க முடியாது என சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் எமக்குக் கௌரவம் இருந்தது. இந்தக் கௌரவத்தைக் கெடுக்கும் வகையில் ஒருவர் சென்றுவிட்டார். அவர் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து புதிய அரசுடன் இணைந்து செயற்படவுள்ள குழுவினருடன் வருவதற்குப் பேச்சு இடம்பெறுவதாக அறிய முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தங்கேஸ்வரி, பியசேன போன்றவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பின்னர் தேர்தலில் தோல்வியை சந்தித்திருந்தனர். அதேபோன்று தற்போது வியாழேந்திரன் சென்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் காலத்திலேயே பெரும்பாலான எமது மக்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். இதன் காரணமாக மஹிந்த மீண்டும் பதவிக்கு வருவதற்கு இடமளிக்கக்கூடாது என குறிப்பாக வன்னிப் பிரதேசத்திலிருந்து பல குரல்கள் வந்தன. அதன் அடிப்படையில் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கினோம். யார் வெல்வது என்பது முக்கியமல்ல, யார் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே எமக்கு முக்கியம்–என்றார். (ஐ)

# மன்னாரில் சில கிராமங்களுக்குள் கடல் நீர்



மன்னார், டிசெ. 17

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்ததால், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வீடுகள் அனைத்தும் கடல் நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டபோதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம், சௌத்பார், எமில்நகர், ஜிம்ரோன் நகர், ஜீவபுரம், பனங்கட்டிக்கோட்டு கிழக்கு, மேற்கு ஆகிய கிராமங்களுக்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் கடல் நீர் படிப்படியாக உட்புகுந்ததால் வீடுகள் கடல் நீரினால் சூழப்பட்டுள்ளன.

மன்னார் ரயில் நிலைய வீதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலூடாகவே கடல் நீர் கிராமங்களுக்குள் செல்ல ஆரம்பித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட கிராமங்களின் கிராம அலுவலகர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

எனினும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டபோதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், கடல் நீர் உட்புகுவதைக் கட்டுப்படுத்தாவிட்டால் அந்தக் கிராமங்களில் உள்ள வீடுகள் அனைத்தும் கடல் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## நாட்டைப் பீடித்த பிணி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்விஷ்டப்படி ஆரம்பித்த அரசியல் குளறுபடிகள் ஐம்பது நாள் திருவிழாவுக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமரானமையுடன் முடிவுக்கு வந்து நாட்டில் வழமை நிலை திரும்பும் – அரசியல் குழப்ப நிலை தீரும் – என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நிலைமை அப்படியல்ல என்றுதான் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

மீண்டும் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் சூழல்தான் தொடருகின்றது.

*"ரணில் விக்கிரமசிங்கவை மீளப் பிரதமராக நியமிக்க மாட்டேன். எனது பதவி பறிபோனாலும் அது நடக்காது. ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்தால் அடுத்த ஒரு மணி நேரத்தில் ஜனாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு மக்களுடன் வீதிக்கு இறங்கிப் போராடப் போய்விடுவேன்."* – என்று கடந்த வாரம்தான் சூளுரைத்திருந்தார் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

சரியான காரணத்துக்காகவோ அல்லது பிழையான காரணத்துக்காகவோ – அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்துக்காகவோ – ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமித்துப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க வேண்டிய கட்டாய நிலைமைக்குள் அவர் தள்ளப்பட்டுவிட்டார்.

அப்படி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்து ஒரு மணித்தியாலம் தாண்டி, இப்போது ஒரு நாளும் முடியப் போகின்றது. ஆனால் தாம் கூறியபடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது பதவியை இராஜினாமாச் செய்யவுமில்லை; மக்களுடன் சேர்ந்து போராடுவதற்காக அவர் வீதிக்கு இறங்கவுமில்லை.

நடந்த அரசியல் முரண்பாடுகள் கடந்துவிட்டன; அரசியல் எதிரித்தனத்தினால் ஜனாதிபதி முன்னர் அப்படிப் பேசிவிட்டார். அரசியல் கட்டாயம் அவரை ரணிலைப் பிரதமராக்கி மீண்டும் அவருடன் சேர்ந்து செயற்பட வேண்டிய நிலையை உருவாக்கிவிட்டது. ஆகவே பழையவற்றை மறந்து இருவரும் சேர்ந்து அரசியல் பணியாற்றுவதே – கடமையைச் செய்வதே – நாட்டின் நலனுக்கு உகந்தது என்றெல்லாம் பார்த்தால் ஜனாதிபதி அப்படிப் பழையவற்றை மறந்து செயற்படுபவராகத் தெரியவில்லை.

நேற்றுப் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க மீளவும் பதவியேற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது அதே அரசியல் எதிரித்தனப் போக்கை – பேச்சை – அங்கும் பிரதிபலித்தார் என்றே உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியில், ஊடகங்களுக்கு நீதித்துறையைத் தாம் மதிக்கிறார் என்றும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குத் தலை வணங்குகின்றார் என்றும் பிரதிபலிக்கும் ஜனாதிபதி, நேற்று பிரதமர் பதவியேற்பு வைபவத்தில் ஊடகங்களுக்கு அனுமதி மறுத்துவிட்டு, அங்கு ஆற்றிய உரையில் நீதித்துறையையும் ஒரு வாங்கு வாங்கினார் எனத் தகவல்.

இலங்கையில் அண்மைய ஏழு வாரங்களாகக் கட்டவிழ்ந்த அரசியல் குளறுபடிகளுக்கு இடையில் போற்றப்பட வேண்டிய ஒரு விடயம் அரசமைப்பையும் சட்டத்தையும் பேணிக் காப்பாற்றி நிலைநாட்டுவதில் நீதித்துறை சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும், உறுதியாகவும் செயற்பட்டமைதான் என்று நேற்று வார இறுதிப் பத்திரிகைகள் பலவும் இலங்கையின் நீதித்துறையை மெச்சி, சிலாகித்துப் பாராட்டியிருந்தன.

அதைத் தாங்கமுடியாது மனம் புழுங்கி, கொதித்து, கொட்டித் தீர்த்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமது எதேச்சாதிகார நடவடிக்கை மூலம் 26 ஒக்டோபரில் அவர் ஆரம்பித்த அரசியல் குளறுபடித்தனத்தின் சிக்கல்களைச் சுமுகமாகத் தீர்க்க அவர் இடமளிக்கப் போவதில்லை என்றே தோன்றுகின்றது.

அவரது சுதந்திரக் கட்சியையும் உள்ளடக்கிய நல்லாட்சி அரசின் கதைக்கு அவரது ஒக்டோபர் 26 நடவடிக்கை மூலம் முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது.

ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸா சுட்டிக்காட்டுகின்றமை போல பிரதமர் ரணில் தலைமையில் இப்போது அமைவது ஐக்கிய தேசிய முன்னணி அரசு. அதை மறந்துவிட்டு, ஐ.தே. முன்னணியில் அவரை அமைச்சராக விட மாட்டேன், இவருக்கு இந்த அமைச்சைக் கொடுக்க மாட்டேன், அந்த அமைச்சை இன்னாருக்குக் கொடுக்க அனுமதிக்க மாட்டேன் என்றெல்லாம் மைத்திரியார் வீண் வீம்புத்தனம் பிடிக்கக்கூடும் என்று தெரிகின்றது. அதுதான் நிலைமை என்றால், ஒக்டோபர் 26 இல் அவர் ஆரம்பித்து வைத்த அரசியல் குளறுபடித் திருவிழா இப்போதைக்கு முடியாது, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை நாட்டைப் பிடித்த பிணியாகத் தொடரும் என்பதுதான் மறுக்கமுடியாத கட்டாயமாக இருக்கும்.

# நிர்வாணக் கோலத்தில் மஹிந்த தலைகுனியட்டும் ஜனாதிபதி

## போட்டுத் தாக்குகின்றார் சம்பிக்க



கொழும்பு, டிசெ. 17

மீண்டும் ஜனாதிபதியாகும் ஆசையால் ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் பதவியை ரணிலிடம் இருந்து பறித்தெடுத்து அதை மஹிந்தவுக்கு முடிசூட்டி அழகுபார்த்தார். இப்போது மஹிந்த பிரதமர் பதவியை இழந்து நிர்வாணக் கோலத்தில் நிற்கின்றார். அதைப் பார்த்து மைத்திரி வெட்கித் தலைகுனிய வேண்டும்.

– இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடமாட்டேன் என்று திரும்பத் திரும்பக் கூறி வந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு திடீரெனப் பதவி ஆசை வந்தது. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் முன்னால் அவர் வைத்த வாக்குறுதிகள் எல்லாம் இன்று காற்றில் பறந்தன.

குடும்ப ஆட்சிக்குத் தூபமிட்ட மைத்திரி அந்தத் திட்டம் நிறைவேறாததால் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியிலிருந்து சர்வாதிகார ஆட்சியை நடத்தினார். தினமும் அவரது வாயில் இருந்து வந்த சொற்கள் தோல்வியின் உச்சத்தைத் தொட்டுக் காட்டின.

மீண்டும் வெற்றி பெற முடியாதவன், மக்களால் வெறுக்கப்படுபவனே இறுதியில் சர்வாதிகார ஆட்சியைக் கையில் எடுப்பான். அந்த நிலைமைக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றார். அவர் தானாகவே ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிச் சென்றிருந்தால் ஓரளவாவது நன்மதிப்பைப் பெற்றிருப்பார். தற்போது படுமோசமான அவமான நிலையை அவர் எதிர்கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியாகிய நாம் நாடாளுமன்றத்தில் பல தடவைகள் பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டியிருந்தோம். அந்தப் பெரும்பான்மைப் பலத்துக்கு மதிப்பளித்தே சபாநாயகர் செயற்பட்டார். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபாநாயகரை மதிக்காது, மஹிந்தவை விடவும் மோசமாகச் சர்வாதிகாரப் போக்குடன் செயற்பட்டார். அதற்கு முடிவு கட்டியுள்ளோம். – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மைத்திரிபால முன்பாக பதவியேற்பதை நினைக்கவே வெட்கமாக இருக்கின்றது!

## சரத் பொன்சேகா மீண்டும் சாடல்



கொழும்பு, டிசெ. 17

எந்த அமைச்சையும் ஏற்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். ஆனால், ஜனாதிபதி மைத்திரியின் முன் மீண்டும் அமைச்சராகப் பதவியேற்கவுள்ளமையை நினைத்து வெட்கப்படுகின்றேன்.

– இவ்வாறு சிரித்தவாறு தெரிவித்தார் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

புதிய அமைச்சரவையில் சட்டம், ஒழுங்கு அமைச்சை சரத் பொன்சேகாவிடமும் ஒப்படைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்று வெளியான செய்தி தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிக்கு மைத்திரியே பிரதான காரணம் என்பது அனைவரும் தெரிந்த விடயம். அவர் செய்த கேவலமான நடவடிக்கைகளை நாம் மறக்கவே மாட்டோம். நாட்டின் நற்பெயரை அவர் கெடுத்துவிட்டார். நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் திறம்படச்செய்வோம் -என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகா உரையாற்றும்போது, மைத்திரிபால சிறிசேனவை 'பைத்தியக்காரன்' – 'மனநோயாளி' என்று விளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டு அரசின் ஆட்சிக் காலத்தில் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கு சரத் பொன்சேகாவை நியமிக்காமல் தடுத்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பது நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

# இராணுவ அதிகாரி உட்பட 15 பேர் புதையல் தோண்டினர் எனக் கைது

மட்டக்களப்பு, டிசெ. 17

மட்டக்களப்பு வாழைச்சேனை நெடியாவெளி காட்டுப் பகுதி மலையொன்றில் புதையல் தோண்டலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 15 சந்தேகநபர்களைத் தாம் கைதுசெய்துள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை 15 சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளமையுடன் புதையல் தோண்டப் பயன்படுத்திய ஸ்கானர் உட்பட உபகரணங்களும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறினர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 4 மணிக்கு அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே புதையல் தோண்டிய-மன்னாரில் கடமையாற்றும் இராணுவ அதிகாரி, 4 இராணுவத்தினர் உள்ளிட்ட - 15 பேரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வாழைச்சேனைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

**நாளை**

18.12.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப. 02.24 வரை
திதி: ஏகாதசி பி.ப. 4.50 வரை
சுபநேரம்: 10.53 – 12.23 வரை
இராகுகாலம்: 3.23 – 4.53 வரை

# கூட்டமைப்பின் விருப்பம் ஒற்றையாட்சித் தீர்வுதான்!

## சர்ச்சையைக் கிளப்புகிறார் அகிலவிராஜ்



கொழும்பு, டிசெ. 17

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எவ்வித உடன்பாடோ ஒப்பந்தமோ செய்யவில்லை. வங்குரோத்து அரசியல் தலைவர்கள் கூறும் கதைகளே இவை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

பிரிக்கப்படாத நாட்டுக்குள் ஒற்றை யாட்சியில் தீர்வைப் பெறவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விரும்புகிறது என்றும் அவர் கூறினார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத்து தெரி வித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒற்றையாட்சி என்பதற்கு அப்பாற் சென்று நாடு ஒருபோதும் பிரிக்கப்படாது.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் ஒற்றை யாட்சியில் தீர்வைப் பெறவே தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பும் விரும்புகிறது. நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒப்பந்தம் இல்லா மல் எங்களுக்கு ஆதரவைக் கொடுத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ப தும் இந்த நாட்டின் ஓர் அரசியல் கட்சி யாகும். அவர்களுக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், அரசமைப்பைப் பாது காக்கவும் வேண்டிய தேவை இருந் தது. அதற்கமைய எங்களுக்கு ஆதர வைக் கொடுத்தார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர்களும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்பதையும் கூறியுள்ளார்கள். அதே போல் ரணில் விக்ரமசிங்கவும் நாடாளு மன்றில் ஆற்றிய உரையில் ஒற்றை யாட்சியைப் பாதுகாத்து, வடக்கு – கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று கூறினார்.

தெற்கைப்போல் வடக்கு மக்களின் அபிவிருத்தியும் அவர்களுக்குத் தேவை யான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது குறித்தும் பேசப்பட்டது. இது சாதாரண ஒரு விடயம். அதைவிடுத்து ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை. அப்படி புதிய அரசமைப்பில் நாட்டைப் பிரிப்பதென் றால், அதற்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மை கிடைக்குமா? பிழையான ஒன்றுக்கு யாரும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்று தெரிவித்தார். (ஐ)

## சர்வ மதத் தலைவர்களையும் சந்தித்து ஆசி பெற்றார் ரணில்



கொழும்பு, டிசெ. 17

புதிய பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரம சிங்க சர்வ மதத்தலைவர்களையும் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நாட்டின் பிரதமராக பதவியேற்றுக் கொண்ட பின்னர் சர்வமதத் தலை வர்களையும் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, அவர்க ளிடம் ஆசி பெற்றார்.

அதன்போது நாட்டின் அமைதி வேண்டி பிரார்த் தனையும் நடத்தப்பட்டது. இதன் பின்னர் அவர்கள் பிரதமர் ரணிலுக்கு பொன்னாடை போர்த்திக் கௌர வித்தனர்.

தொடர்ச்சியாகக் கொழும்பு கங்காராம விகாரை உள்ளிட்ட முக்கிய வணக்க ஸ்தலங்களுக்கும் பிரத மர் ரணில் செல்லவிருந்தார். (ஐ)

## சுபீட்சமான எதிர்காலத்துக்கு இப்போது வழி கிட்டியுள்ளது

### கூறுகிறார் சுவாமிநாதன்

பிரதமராக மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பதவி யேற்கும் வகையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சட்டரீதியாக ஜனநாயகத்தைக் காத்து கடமைகளை நிறைவேற்ற வழி சமைத்துள்ளதென ஐக்கிய தேசி யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமி நாதன் தெரிவித்தார்.

நாட்டின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி யேற்ற பின்னர், அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வின்போது கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, இது, நாட்டின் முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்துக்கு வழிகாட்டியுள்ளதாகவும் கூறினார்.

மேலும், சட்டத்தைக் கடைப்பிடித்து ஜனநாயக வழியில் சென்றமை இலங்கையின் முன்னேற்றத் துக்கு வழி கோலியுள்ளதென்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் தெரிவித்தார். (ஐ)

## வெள்ளத்தினால் 180 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைவு

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக 180 ஏக்கர் நெற் பயிர் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் அதிகளவான வயல்வெளிகளில் மழைநீர் வடிந்து ஓடாத காரணத் தால் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இங்கு இம்முறை 950 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காலி முகத்திடலில் ஐ.தே.கவின் மாநாடு

### இன்று பிற்பகலில் நடக்கிறது

கொழும்பு, டிசெ. 17

ஐக்கிய தேசியக் கட்சியின், மாநாடு இன்று திங்கட் கிழமை கொழும்பு – காலி முகத்திடலில் இடம்பெற வுள்ளதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஒக்ரோபர் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சியின் வெற்றிக் கொண்டாட்டமாக இந்த மாநாடு அமையவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் கள் எம்முடன் ஒத்துழைக்காமல் இருந்திருந்தால், நிச்சயமாக இந்த வெற்றியை எம்மால் பெற்றுக்கொண் டிருக்க முடியாது.

அரசமைப்புக்கு மற்றும் ஜனநாயகத்துக்கு எதிரா கவே ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து, ஒக்ரோபர் 26 ஆம் திகதி பிரதமர் பதவி பறிக்கப்பட்டது.

இதற்கெதிராக நாம் தொடர்ந்தும் பல்வேறு முறை களில் போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம். இறுதி யில், இந்தச் சூழ்ச்சியைத் தோற்கடித்து நாம் வெற்றியும் பெற்றுக் கொண்டுள்ளோம்.

எனவே, 17 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு நடை பெறும் இந்த மாநாடு, இந்த அரசியல் சூழ்ச்சியைத் தோற்கடித்த வெற்றி மாநாடாக இடம்பெறவுள்ளது.

இதில்,ஆதரவாளர்கள் கலந்து கொள்ளவேண்டும் என்றும் நாம் அழைப்பு விடுக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மஹிந்தவால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு பெரும் சிக்கல்

கொழும்பு, டிசெ. 17

மஹிந்த ராஜபக்ஷ அரசில், கடந்த 52 நாள்களில் வழங்கப்பட்ட சட்டவிரோத அரச பதவிகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், சட்ட விரோதமாகப் பணிக்கு அமர்த்தப்பட்ட அதிகாரிகள் நீக்கப்படுவர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பதவி விலக்கப்பட்ட பின்னர் அவரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் விலக்கப் பட்டு அங்கு பல புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இதேவேளை கடந்த 52 நாள்களில் மஹிந்த ராஜபக்ஷ வின் அரசால் நியமிக்கப்பட்ட பல அதிகாரிகள் நேற்று முன் தினம் தமது பதவிகளை விட்டு விலகியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## பொலிஸார் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ. 17

மட்டக்களப்பு – ஊறணி, நாவற்கேணிப் பிரதேசத்தில் விசாரணைக்காகச் சென்ற இரு பொலிஸ் அதிகாரிகள், மீது தாக்குதல் நடத் தப்பட்டதில் அவர்கள் இருவரும் படுகாயம் அடைந்தனர்.

நேற்று முன் தினம் காலை 10.30 மணிக்கு விசாரணை ஒன்றுக்காக இரு பொலிஸ் அதி காரிகள், சென்றிருந்தனர். பொலிஸார் விசா ரணையில் ஈடுபட முற்பட்டபோது மூவர் பொலி ஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பியோடி யுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த இரு பொலிஸா ரும் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்தி ய அதே பிரதேசத்தைச் சேர்ந்த 24, 30 வய துடைய இருவரைக் கைது செய்தமையுடன் ரூபன் என்று அழைக்கப்படும் மற்றவர் தலை மறைவாகியுள்ளார் எனவும் பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட வர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை மட்டு தலை மையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ஐ)

**வாழ்வகம்**

**வாழ்வக அனுமதி - 2019**

**வாழ்வக நிறுவனத்தில் இணைந்து கல்வி கற்க விரும்பும் கண் பார்வையற்ற, குறைந்த பார்வையு டைய பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**உணவு, உடை, தங்குமிடம், கல்வி கற்பதற்கான வசதிகள், பார்வையற்ற பிள்ளைகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், மருத்துவ வசதிகள் உட் பட அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.**

**இவ்விதமான பிள்ளைகளின் பெற்றோர்கள்/ பாதுகாவலர்கள் எதிர்வரும் 31.12.2018 ஆம் திகதிக்குப் பிந்தாமல் கீழ் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வள மான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

**தொடர்பு - தலைவர்,**
**வாழ்வகம்,**
**சபாபதிப்பிள்ளை வீதி,**
**சுன்னாகம்.**

**தொலைபேசி -**
**021 224 0146**
**0768286331**

# பிறந்து இரு மணி நேரத்தில் பாஸ்போர்ட், ஆவணங்கள்!

## குஜராத்தில் அதிகாரிகள் சாதனை

குஜராத்தில் பிறந்த 2 மணிநேரத்தில் குழந்தைக்கு பிறப்புச் சான்றிதழ், ஆதார், ரேஷன் கார்ட், பாஸ்போர்ட் என அனைத்து அரசுச் சான்றுகளும் பெறப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் சூரத்தைச் சேர்ந்த அங்கித் – பூமி தம்பதியருக்கு டிசம்பர் 12 ஆம் திகதி பெண் குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தைக்கு ரம்யா எனப்பெயர்சூட்டப்பட்டது. குழந்தை பிறந்து உடனேயே அதற்கு பாஸ்போர்ட் வாங்கவும், ஆதார் எண் பெறவும், அவரது பெற்றோர் திட்டமிட்டனர். ஆதார், ரேஷன் கார்ட், பாஸ்போர்ட் என அனைத்தையும் வேகமாக பெற்ற குழந்தை என்ற பெயரை தங்கள் குழந்தை பெற வேண்டும் என எண்ணினர். தங்கள் குழந்தைக்கு அனைத்தையும் பெறுவதற்காக முன்கூட்டியே அரசு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தகவலை தெரிவித்தனர்.

அதன்படி அந்த பெண் குழந்தை பிறந்ததை உடனடியாக பதிவு செய்து சூரத் மாநகராட்சி அதிகாரிகள் வேகமாகப் பிறப்புச் சான்றிதழ் வழங்கினர். இதை பயன்படுத்தி ரேஷன் கார்ட் மற்றும் ஆதாருக்கும் விண்ணப்பிக்கப்பட்டது. அது போலவே ஒரே நேரத்தில் பாஸ்போர்ட் பெறவும் அங்கீத் விண்ணப்பத்தை அனுப்பினார்.

முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டு அதிகாரிகள் தயாராக இருந்தமையால் உடனடியாக வேலைகள் நடந்தன.



குழந்தை பிறந்த 2 மணிநேரத்தில் அனைத்து பணிகளும் முடிந்து குழந்தைக்கு பிறப்புச் சான்றிதழ், ஆதார், பாஸ்போர்ட், ரேன் கார்ட் என அனைத்தும் வழங்கப்பட்டன.

இதுகுறித்து குழந்தையின் தந்தை அங்கீத் கூறுகையில் "பிரதமர் மோடியின் டிஜிட்டல் இந்தியா கனவுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த முயற்சியை மேற்கொண்டேன். அரசின் அனைத்து ஆவணங்களும் உள்ள மிக குறைந்த வயதுகொண்ட பெண் குழந்தை என்ற பெருமையை எனது மகள் பெற வேண்டும் என நினைத்தேன். அது நிறைவேறியுள்ளது. முழு ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகளுக்கு எனது நன்றி" எனக் கூறினார்.

# ராஜஸ்தானின் 199 எம்.எல்.ஏக்களில் 158 பேர் கோடீஸ்வரர்கள் எனத் தகவல்

ஜெய்ப்பூர்,டிசெ.17

ராஜஸ்தான் மாநிலத்தில் அண்மையில் நடந்த தேர்தல்களில் 199 எம்.எல்.ஏ.க்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 158 பேர் கோடீஸ்வரர்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் ப்ரஸ்ராம் மோர்டியா ரூ.172 கோடியும், உதய்லால் அஞ்சனா ரூ.107 கோடியும், சுயேச்சை எம்.எல்.ஏ. ராம்கேஷ் மீனா ரூ.39 கோடியும் உள்ளதாக வருமான வரி கணக்கில் தெரிவித்துள்ளனர். கடந்த சட்டமன்றத்தில் 145 பேர் கோடீஸ்வரர்களாக இருந்தனர்.

59 எம்.எல்.ஏ.க்கள் 5 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையும், 129 எம்.எல்.ஏ.க்கள் பட்டம் மற்றும் முதுநிலை பட்டமும் படித்துள்ளனர். 7 பேர் எழுத, படிக்க மட்டுமே தெரியும் என்று கூறியுள்ளனர். மொத்தம் 23 பெண் எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர்.

46 எம்.எல்.ஏ.க்கள் மீது குற்றவழக்குகள் உள்ளன. இவர்களில் 28 பேர் மீது தீவிரமான குற்றவழக்குகள் உள்ளன. பர்சாடிலால் என்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ. மீது கொலை வழக்கு உள்ளது.

# இரும்பு வேலியில் சிக்கி யானை சாவு கர்நாடகத்தில் சனியன்று பரிதாபம்!

கர்நாடாவில் நகரஹோலே தேசியப் பூங்காவைச் சேர்ந்த யானை ஒன்று ரயில்வேயின் உயரமான இரும்பு வேலியைக் கடக்க முற்பட்டபோது அதில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தது.



சனிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. ரயில்வே நிர்வாகம் வனப்பகுதியிலிருந்து யானைகள் மனிதர்கள் வாழும் பகுதிக்குள் ஊடுருவக் கூடாது என்பதற்காக இரும்பு வேலி அமைத்துள்ளது.

42 வயதான இந்த யானை வெள்ளி இரவன்று மனிதர்கள் வாழும் பகுதிக்குள் நுழைந்து அங்குள்ள விவசாய நிலங்களில் புகுந்து விளையாடி விட்டுத் திரும்பவும் வனத்துக்குள் நுழைய முயன்றது.

அப்போது உயரமான இரும்பு வேலியை யானை கடக்க முயன்றது, ஆனால் அதிலேயே இந்தப் பக்கமும் வர முடியாமல் அந்தப் பக்கமும் போக முடியாமல் கடுமையாகச் சிக்கியது. சிக்கலான நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் யானை வேதனையான தோல்வியைத் தழுவியது.

தாண்டும்போது உடல் எடையினாலேயே அது நசுங்கி நேற்றுக் காலை 5 மணிக்கு அதே நிலையிலேயே பரிதாபமாக பலியானது.

மனித–விலங்கு மோதலைத் தவிர்க்க நிர்வாகம் இந்த வேலியை 33 கி.மீக்கு அமைத்தது. ஆனாலும் வேலியைக் கடந்து யானைகள் வரவே செய்கின்றன. வேலி அமைக்க கர்நாடக அரசு 2015இல் ரூ.212 கோடி ஒதுக்கியது, இந்தத் திட்டம் மீது கடும் விமர்சனங்களும் எழுந்தன.

சில வேளைகளில் மாடுகளும் வேலிக்கம்பியின் இடைவெளியில் சிக்கித் தவிப்பதும் நடந்துள்ளது, இந்நிலையில் இந்த யானையின் பரிதாபச் சாவு அங்கு கடும் விமர்சனங்களைக் கிளப்பியுள்ளது.

(உ)

# சிறுமியின் மீது பாலியல் பலாத்காரம் எம்.எல்.ஏ. குற்றவாளி எனத் தீர்ப்பு!

## பிஹார் நீதிமன்றம் அறிவிப்பு

பீஹாரில் சிறுமி மீதான பாலியல் பலாத்கார வழக்கில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. நவடா மாவட்டத்தை சேர்ந்தவர் ராஜ் பல்லப் யாதவ். ராஷ்ட்ரீய ஜனதாதளம் சார்பில் சட்டசபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் கடந்த 2016 ஆம் ஆண்டு சிறுமி ஒருவரைப் பாலியல் பலாத்காரம் செய்தார் என முறைப்பாடு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து ராஜ் பல்லப் யாதவ் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். இந்த வழக்கில் ராஜ் பல்லப் யாதவ் உள்பட 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. மாவட்ட கூடுதல் மற்றும் செசன்ஸ் நீதிமன்றில் நடந்து வரும் இந்த வழக்கில் ராஜ் பல்லப் யாதவ் எம்.எல்.ஏ. உள்பட 6 பேரும் குற்றவாளிகள் என நீதிபதி பரசுராம் யாதவ் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினார். இவர்களின் தண்டனை தொடர்பான வாதங்கள் வரும் 21 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

ராஜ் பல்லப் யாதவ் எம்.எல்.ஏ. மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உள்ளதால் அவருக்கு 6 ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை கிடைக்க வாய்ப்பு இருப்பதாக அரசு தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார். இதன் மூலம் அவரது எம்.எல்.ஏ. பதவி பறிபோகும் எனவும் அவர் கூறினார்.

# கோவில் பிரசாதத்தில் பூச்சிக்கொல்லி மருந்து கர்நாடகத்தில் 13 பக்தர்கள் சாவுக்கு காரணம்

கர்நாடக மாநிலத்தில் கோயில் பிரசாதத்தைச் சாப்பிட்டதில் 13 பேர் பலியான விவகாரத்தில், கோயிலில் வழங்கப்பட்ட தக்காளி சாதத்தில் பூச்சிக்கொல்லி மருந்து கலந்திருந்தமை தெரிய வந்திருக்கின்றது. கோயில் விவகாரத்தை ஒட்டி இருதரப்புகளுக்கு இடையில் நிலவி வந்த பகைமையே இந்த கொடூரச் செயலுக்குக் காரணம் என்றும் கூறப்பட்டது.

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்டம், சுலவாடி கிராமத்தில் கிச்சு மாரண்டா கோயில் உள்ளது. இந்த கோயில் கடந்த வெள்ளியன்று திருவிழாவையொட்டி ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர். அப்போது, கோயில் சார்பில் பக்தர்களுக்கு தக்காளிச் சாதம் பிரசாதமாக வழங்கப்பட்டது.

இந்தத் தக்காளிச் சாதத்தைப் சாப்பிட்ட சிறிது நேரத்தில் பலர் மயங்கி விழுந்தனர். சிலர் வாந்தி எடுத்து, தலைசுற்றலில் இருந்தனர். இதையடுத்து மயங்கி விழுந்தவர்களை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். சிகிச்சை பயன் அளிக்காமல் 13 பேர் வரை உயிரிழந்தனர். 90 க்கும் மேற்பட்ட பக்தர்கள் பல்வேறு மருத்துவமனைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.



வைத்தியசாலையில் பக்தர்களுக்கு சிகிச்சை

இந்நிலையில், பொலிஸாரின் முதல் கட்டவிசாரணையில் பக்தர்கள் சாப்பிட்ட கோயில் பிரசாத தக்காளிச் சாதத்தில் பூச்சிக்கொல்லி மருந்து கலக்கப்பட்டு இருப்பது அந்தச் சாதத்தை ஆய்வு செய்ததில் தெரியவந்துள்ளது, மேலும், அந்தச் சாப்பாட்டை சாப்பிட்ட காகங்கள், பறவைகள் இறந்து கிடந்தமையை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

இந்த விவகாரத்தில் பொலிஸார் இதுவரை 2 பேரைக் கைது செய்துள்ளனர், 5 பேரைத் தேடி வருகின்றனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பக்தர்களை கர்நாடக அறநிலையத்துறை அமைச்சர் புட்டரங்கா ஷெட்டி சந்தித்து உடல்நலம் விசாரித்தார்.

அவர் நிருபர்களிடம் கூறுகையில், கோயில் பிரசாதத்தில் சிலர் பூச்சிகொல்லி மருந்து கலந்துள்ளமை தெரியவந்துள்ளது. தவறு செய்தவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே பொலிஸார் இது தொடர்பாக இருவரைக் கைது செய்துள்ளனர். இரு தரப்புக்கும் இடையிலான பகையால், பக்தர்களைப் பலியாக்குவது முறையல்ல .

கோயில் பிரசாதத்தைச் சாப்பிட்ட பலர் இன்னும் தொடர் சிகிச்சையில் இருந்து வருகின்றனர். சிலர் கடுமையாக பாதிக்கப்பட்டு செயற்கை சுவாச சிகிச்சையில் உள்ளனர். பெங்களூரில் உள்ள கேர் மருந்துவமனையில் 47 பேரும், மைசூருவில் உள்ள ஜே.எஸ்.எஸ். மருத்துவமனையில் 17 பேரும் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக 91 பக்தர்கள் வரை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று முதல்வர் எச்.டி.குமாரசாமி அறிவித்துள்ளார். முன்னாள் முதல்வர் சித்தராமையாவும் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து நலம் விசாரித்தார்.

# கிடுகிடு பள்ளத்தில் வான் வீழ்ந்து நொறுங்கியது நேபாள விபத்தில் 20பேர் சாவு; 17 பேர் காயம்!

நேபாளத்தில் மலைப் பாதையில் சென்ற வான் ஒன்று தவறி பாதையை விட்டு விலகிக் கிடுகிடு பள்ளத்தில் வீழ்ந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

இது குறித்து பொலிஸார் தரப்பில் கூறப்பட்டவை வருமாறு:-

நேபாளத்தில் வெள்ளிக்கிழமையன்று துக்க நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டவர்களை ஏற்றிக் கொண்டு வந்த வான் கியான்பேடி பகுதியில் உள்ள மலை பாதையில் பாதை தடு மாறி, சுமார் 13,000 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் சம்பவ இடத்திலேயே 20 பேர் பலியாகினர். 17 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 18 உடல்கள் மீட்கப்பட்டுள் என- என்றனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்து வருவதாகவும் வான் அதீத வேகத்தில் வந்ததே விபத்துக்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேபாளத்தில் மலைப் பாதையில் உள்ள மோசமான வீதிகளின் காரணமாக அங்கு விபத்துகள் கடந்த சில வருடங்களில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## பருவநிலை ஒப்பந்தத்தை செயல்படுத்த உடன்பாடு

### போலந்து மாநாட்டில் எட்டப்பட்டது




பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தை 2020க்குள் செயல்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக போலந்தில் கூடிய பேச்சுவார்த்தையாளர்கள் , பல கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இறுதி உடன்படிக்கையை எட்டியுள்ளனர்.

முன்னர், கார்பன் சந்தையின் எதிர்காலம் குறித்த அச்சுறுத்தல்கள் காரணமாக கூட்டத்தின் கடைசி நிமிடத்தில் ஏற்பட்ட கூச்சல் குழப்பத்தில் இந்த கூட்டம் மேற்கொண்டு தொடருமா என்றிருந்த நிலையில், இறுதி உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட புதிய விதிகள், உலக நாடுகள் உறுதியேற்றுள்ள கார்பன் வெளியேற்ற கட்டுப்பாட்டை நிச்சயப்படுத்தும் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் நம்புகின்றனர்.

## சனிக்கிழமை தோறும் பிரான்ஸில் 'மஞ்சள் ஜாக்கெட்' போராட்டம்!

பாரிஸ், டிசெ.17




தொடர்ந்து ஐந்தாவது சனிக்கிழமையாக பிரான்ஸில் 'மஞ்சள் ஜாக்கெட்' போராட்டக்காரர்கள் தலைநகர் பாரிஸ் மற்றும் பிற நகரங்களில் கூடி, போராட்டம் நடத்தினர்.

அதிகரிக்கும் பெற்றோல் - டீசல் விலைக்கு எதிராகத் தொடங்கப்பட்ட இந்தப் போராட்டம், பல்வேறு கோரிக்கைகளுக்காக இன்னும் தொடர்கிறது.

மரபுசாரா எரிசக்தியில் முதலீடு செய்ய இந்த விலையேற்றம் தவிர்க்க இயலாதது என்று கூறிய அரசு பின்னர் போராட்டக்காரர்களுக்கு செவி சாய்த்தது.

எனினும், பிற கோரிக்கைகளை வலியுறுத்தி சமூக ஊடகங்கள் மூலம் ஒருங்கிணைக்கப்படும் இந்தப் போராட்டம் இன்னும் தொடர்கிறது.

## 82 கிலோ மீற்றர் உயரம் பறந்து பத்திரமாக திரும்பிய விமானம்!

### விண்வெளி எல்லை வரை சென்று மீண்டது

கலிபோர்னியா, டிசெ.17

விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட விர்ஜின் காலக்டிக் நிறுவனத்தின் விமானம், விண்வெளியின் எல்லை வரை சென்று வெற்றிகரமாக திரும்பி உள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த விர்ஜின் காலக் டிக் நிறுவனம், விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது. இதற்காக சிறப்பு விமானத்தை உருவாக்கி, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.



மூன்று முறை நடத்தப்பட்ட சோதனை தோல்வியடைந்த நிலையில், நேற்று முன்தினம் மீண்டும் சோதனை நடத்தப்பட்டது. விண்வெளிக்கு செல்வதற்காக வடிவமைக் கப்பட்ட சிறப்பு விமானம், கலிபோர்னியாவின் மோஜவே பாலைவனத்தில் இருந்து புறப்பட்டு, விண்வெளிக்கு மிகவும் அருகில் சென்று வெற்றிகரமாக திரும்பியுள்ளது.

'ஸ்பேஸ்-ஷிப்-டு' என்று அழைக்கப்படும் அந்த விமானம் பூமியிலிருந்து 82.7 கிலோ மீற்றர் உயரத்துக்குச் சென்றது. இந்தச் சோதனை திருப்திகரமாக அமைந்ததால், விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மனிதர்களை விண்வெளிக்கு சுற்றுலா அழைத்துச் செல்லும் போட்டியில் எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் ஜெவ் பெஸோ ஸின் புளூ ஓரிஜின் நிறுவனங்களுடன் சேர் ரிச்சர்ட் பிரான்ஸனின் விர்ஜின் காலக்டிக் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

2014ம் ஆண்டு சோதனை ஓட்டத்தின் போது நடுவானில் விமானம் வெடித்துச் சிதறியதால், விண்வெளி சுற்றுலா திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மிதக்கும் அணு மின் நிலையம் உருவாக்கி ரஷ்யா சாதனை!

மொஸ்கோ, டிசெ.17

ரஷ்யாவைச் சேர்ந்த ரொஸாட்டம் ஸ்டேட் அணு சக்தி கோர்ப்பரேசன், உலகின் முதல் மிதக்கும் அணு மின் நிலையத்தை ('அகடமிக் லோமோ னோசோவ்' என்ற பெயரிலான கப்பல்) உருவாக்கி சாதனை படைத்துள்ளது.



இது குறித்து அந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி அலெக்ஸி லிக்கா செவ் கூறும்போது, "உலகின் முதல் மிதக்கும் அணுமின் நிலையத்தின் அணு உலையினுடைய செயல்பாட்டு சோதனைகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். 10 சதவீத திறனுடன் இந்த அணு உலை தொடங்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்டபடி ரஷ்யாவின் பெவெக் நகரத்தை அடுத்த இலையுதிர் காலத்திற்குள் சென்று அடைந்து அங்கு உற்பத்தியைத் தொடங்கும். மிகவும் தொலைதூரத்தில் உள்ள பின்தங்கிய பகுதிகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்வதில் இந்த அணு உலை முக்கிய பங்கு வகிக்கும்" என்று கூறினார்.

மேலும், "இந்த புதிய அணு உலை, ரஷ்ய ஆர்க்டிக் பகுதிகளுக்கு மட்டுமல்லாமல், உலகில் உள்ள எண்ணற்ற நாடுகளுக்கு நல்ல தீர்வாக அமையும். இந்த திட்டம் வெற்றி பெற்றிருப்பதை யடுத்து சிறிய அணு உலை களுக்கான தேவை உலகம் முழுவதும் வெகுவாக அதிகரிக்கும். உலகின் அணு உலை தொழில் நுட்ப சந்தையில் ரஷ்யா முதலிடத்தில் இருக்கும்" எனவும் அவர் தெரிவித்தார்.

## வெள்ளை மாளிகை நிர்வாகப் பதவிக்கு தற்காலிகமாக ஒருவரை டிரம்ப் நியமனம்



வொஷிங்டன், டிசெ.17

வொஷிங்டன் வெள்ளை மாளிகைப் பணியாளர் தலைவர் பதவிக்கு தற்காலிகமாக மிக் முல்வானே என்பவரை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நியமனம் செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் நிர்வாகப்பணியாளர்களின் தலைவர் பதவி என்பது செல்வாக்கும், அதிகாரமும் மிகுந்த பதவி. இந்தப் பதவியில் இருந்து வந்தவர் ஜோன் கெல்லி.

இவருக்கும், அதிபர் டிரம்புக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது.


இதையடுத்து ஜோன் கெல்லி இந்த மாத இறுதியில் பதவி விலகுகிறார் எனத் தகவல் வெளியானது. அதை ஜனாதிபதி டிரம்ப் உறுதி செய்தார். ஜோன் கெல்லியின் இடத்துக்குத் தனது மருமகன் ஜெரட் குஷ்னரை நியமிக்க டிரம்ப் பரிசீலிக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த நிலையில், வொஷிங்டன் வெள்ளை மாளிகை பணியாளர் தலைவர் பதவிக்கு தற்காலிகமாக மிக் முல்வானே என்பவரை டிரம்ப் நியமனம் செய்துள்ளார்.

இதுபற்றி டுவிட்டரில் டிரம்ப் வெளியிட்ட பதிவில், மேலாண்மை மற்றும் பட்ஜெட் அலுவலக இயக்குநர் மிக் முல்வானே, வெள்ளை மாளிகை பணியாளர்களின் தற்காலிக தலைவராக நியமிக்கப்படுகிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். அவர் நிர்வாகத்தில் மிகச் சிறப்பான பணியை செய்திருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(உ)

**வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வாராந்த கேள்வி-பதிலில் இவ்வாரக் கேள்விக்குப் பதிலளித்துள்ளார்.**



# யுத்தக் குற்ற விசாரணை:

# நியாயம் கிடைப்பதற்கு வெளிநாட்டு நீதித்துறை உள்நுழைவு அவசியமே!

**கேள்வி** - நீதித்துறை தற்போது சிறந்த தீர்ப்புக்களைத் தரத் தொடங்கியுள்ளன. எனவே உள்நாட்டு நீதிபதிகள் குழாம் யுத்தக் குற்ற விசாரணைகளை நடத்தலாம் என்றும் வெளிநாட்டு உள்ளீடல்கள் தேவையில்லை என்றும் கூறப்படுகிறது. ஒரு நீதியரசராக இருந்த உங்களின் கருத்து என்ன?

**பதில்** - தற்போதைய பிரதம நீதியரசர் நளின் பெரேரா விரைவில் ஓய்வுபெற உள்ளார். ஆரம்ப நீதிமன்றங்களில் இருந்து படிப்படியாக உயர்ந்து வந்தவர் அவர். பிரதம நீதியரசர் சன்சோனியின் பின்னர் தற்போதைய பிரதம நீதியரசரே முழுமையாக ஆரம்ப நீதிமன்றங்களில் இருந்து படிப்படியாக உயர்ந்து வந்த ஒரு பிரதம நீதியரசர் ஆவார்.

பிரதம நீதியரசர் பரிந்த ரணசிங்க குறுக்கு வழியில் பிரதம நீதியரசராக வந்தவர். அதாவது ஆரம்ப நீதிமன்றங்களின் நீதிபதியாக இருந்து மேல் வந்திருந்தாலும் அவருக்கு நீதி அமைச்சின் செயலாளர் பதவி அளிக்கப்பட்டு அங்கிருந்து பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டவர். அவர் உரியவாறு பதவி உயர்வு பெற்று உயர் நீதிமன்றத்திற்கு வந்திருந்தால் அவரால் பிரதம நீதியரசராக வந்திருக்க முடியாது. காரணம் சட்டத்துறைத் தலைமை அதிபதியின் திணைக்களத்தில் (Attorney General's Department)15 – 20 வருடங்கள் அரசாங்கத்தின் நலனுக்காக வழக்குகள் பேசிவந்த அரச சட்டத்தரணிகள், உதவி சொலிசிற்றர் ஜெனரல் அல்லது உதவி மன்றாடியார்கள், மேலதிகமன்றாடியார்கள், மன்றாடியார்கள், சட்டத்துறைத் தலைமை அதிபதிகள் ஆகியோரே உயர் நீதித்துறைப் பதவிகளுக்குப் பெருவாரியாக இந் நாட்டில் நியமிக்கப்படுகின்றார்கள்.

பல ஜனநாயக நாடுகளில் அப்படி நியமனங்கள் இடம் பெறுவதில்லை. இவர்கள் வயதில் குறைந்தவர்கள் என்பதால் எளிதாக பிரதம நீதியரசர் நிலைக்கு வந்து விடுகின்றார்கள் அல்லது நேராகவே சட்டத் துறைத் தலைமைஅதிபதி பிரதம நீதியரசராக நியமிக்கப்படுகின்றார். சிரேஷ்ட நீதியரசர் நாகலிங்கம் அவர்களை பிரதம நீதியரசர் ஆக்காது சட்டத்துறைத் தலைமையதிபதியாக இருந்த பஸ்நாயக்க 1950களிலேயே பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். ஆளுநர் நாயகமாகக் கூட பதில் நியமனம் பெற்ற நீதியரசர் நாகலிங்கம் பிரதம நீதியரசர் ஆக்கப்படவில்லை. அதுதான் எமது சரித்திரம்.

நீதிபதிகளின் பின்னணி இல்லாதவர்களே சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களத்தவர்கள். ஆரம்ப நீதிமன்றங்களில் நீதித்துறைப் பதவிகள் வகித்து பதவி உயர்வு பெற்று வந்தவர்கள் பொதுவாகவே மக்கள் நலம் பற்றி சிந்திப்பவர்கள். அவர்கள் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் இருந்து மக்கள் சார்பாகத் தீர்ப்புக்களை வழங்கி வந்தவர்கள். அரசின் நலனுக்குமுன்னுரிமைகொடுக்க வேண்டும் என்ற எந்த ஒருகடப்பாடோ கருத்தோ கொண்டவர்கள் அல்லர்.

ஆனால் சட்டத்துறைத் தலைமை அதிபதியின் திணைக்களத்தில் இருந்து திடீரென மேன்முறையீட்டு அல்லது உச்ச நீதிமன்றங்களுக்குப் பதவி பெற்றுப் போகின்றவர்கள் தமது தொழில் வாழ்க்கை முழுவதிலும் அரசின் நலன்களைப் பாதுகாத்துவந்தவர்களே. ஒரு பிரச்சினை எழும் போது அதனைத் தம்மை அறியாமலேயே அரச நிலையில் இருந்து பரிசீலிக்கப் பழக்கப்பட்டவர்கள். அவர்களிடம் இருந்து முழுமையாக மக்கள் நலம் சார்ந்த தீர்ப்புக்களை எதிர்பார்ப்பது கடினம்.

நீதியரசர்கள் என்ற முறையில் அவர்களுக்கு இரண்டு குறைபாடுகள் உண்டு. ஒன்று அனுபவம் பெற்று பதவி உயர்வு பெற்று நீதித்துறையிலிருந்து வருபவர்களிலும் பார்க்கக் குறைந்த வயதுடையவர்கள் இவர்கள். அடுத்தது அவர்கள் நீதிபதி ஒருவரின் அனுபவம் இல்லாதவர்கள். 15 – 20 வருடங்களாக அரச சட்டத்தரணிகளாக அரசின் நலன் கருதி கடமையாற்றி வந்தவர்கள் தம்மை அறியாமலே அரச சட்டத்தரணிகளாகவே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாகவோ உச்ச நீதிமன்ற நீதியரசர்களாகவோ வந்த பின்னரும் சிந்திக்கின்றார்கள்; செயல்படுகின்றார்கள். ஓரிருவர் இதற்கு விதிவிலக்காகலாம். ஆனால் பெரும்பான்மை உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் அட்டோர்ணி ஜெனரல் திணைக்கள அனுபவத்துடன் அந்த நீதிமன்றிற்கு வந்தவர்களே. அரசு செய்பவை சரியென்ற கடந்த கால உணர்வில் செயற்பட்டு வந்தவர்களே.

இதில் ஒரு முக்கிய விடயம் கவனத்திற்கு எடுக்கவேண்டும். குற்றவியல் தவிர்ந்த மக்களின் பிரச்சினைகள் பெரும்பாலும் அரசுடனேயோ, அரச அலுவலர்களுடனோ, அரச கோட்பாடுகளுடனோ தான் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அரசிற்கும் பொதுமக்களுக்கும் இடையில் தர்க்கம், பிணக்கு, முரண்பாடுகள் ஏற்படும் போது நீதிபதிகள் கட்டாயமாக மக்கள் பக்கம் இருந்து சிந்தித்தால்தான் ஒரு முறையான, நீதியான, நியாயமான தீர்மானத்திற்கு வரலாம். அரசானது சகல அதிகாரங்களையும் ஆற்றல்களையும் கொண்ட ஒரு பெரிய நிறுவனம். பொது மக்களுக்கு சட்டமொன்றே அனுசரணை வழங்குகின்றது. சட்டத்தின் அனுசரணை இல்லை என்றால் ஒரு பொதுமகன் அரசின் அதிகாரத்தின் முன் சக்தியற்றவனாகவே இருப்பான். ஆகவே பலம் குறைந்த, சக்தி குறைந்த, அதிகாரமற்ற பொது மகனுக்கு அனுசரணையாக இருந்தே நீதிபதிகள் அரசுடனான வழக்குகளை விசாரிக்கவேண்டும்; விளங்கவேண்டும்.

நான் உச்ச நீதிமன்ற நீதியரசராக உயர்வு பெற்று வந்த புதிதில் இவ்வாறான சட்டத்துறைத் தலைமைஅதிபதி திணைக்களத்தில் இருந்து நேரே மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு உயர்வு பெற்று வந்த இரு நீதியரசர்களுடன் மூன்று நீதியரசர்கள் குழாமாக செயற்பட்டேன். ஒரு வழக்கில் பொலிஸாரால் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட ஒருவர் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என வழக்குத் தொடுத்திருந்தார்.

நான் வழக்கை நன்றாகப் படித்துவிட்டதில் விண்ணப்பதாரரின் பக்கம் நியாயம் இருந்ததைக் கண்டேன். வழக்கு கூப்பிட்ட உடனே ஒரு கனிஷ்ட சட்டத்தரணி ஆஜராகி பொலிஸாரின் அட்டூழியம் பற்றி விவரிக்கத் தொடங்கினார். எமது குழாமின் தலைமை நீதியரசர் குறுக்கிட்டு 'பொலிஸார் அடித்திருந்தால் உங்கள் கட்சிக்காரர் ஏதோ பிழை செய்திருந்தார் என்று அர்த்தம். என்ன பிழை செய்தார் அவர்?' என்று அதட்டலாகக் கேட்டார். கனிஷ்ட சட்டத்தரணி தடுமாறினார்.

உடனே அவர் 'பார்த்தீர்களா? உங்கள் கட்சிக்காரர் செய்த பிழையைச் சொல்ல நீங்கள் தயங்குகின்றீர்கள். நீங்களே தவறு செய்துவிட்டு இங்குவராதீர்கள்! நாங்கள் உங்கள் விண்ணப்பத்தை நிராகரிக்கின்றோம்'. என்றார். உடனே நான் 'இல்லை. இந்த வழக்கை நான் படித்து வந்துள்ளேன். பொலிஸாருக்கு அறிவித்தல் உடனே அனுப்பவேண்டும்' என்றேன். உடனே சிரேஷ்டரான அவர் என்னை வேறொரு கிரகத்தில் இருந்து வந்தவர் போலப் பார்த்துவிட்டு மூன்றாவது நீதியரசரைப் பார்த்தார். அவரும் அதே திணைக்களத்தில் இருந்து வந்தவர்தான். ஆனால் ஒன்றும் சொல்லா

## அரச சட்டத்தரணியாகச் செயற்பட்டவர்கள் மக்கள் நலம் சார்ந்து தீர்ப்பளிப்பார்களா?

மல் இருந்தார். உடனே எங்கள் குழாமின் தலைமை நீதியரசர் 'நாங்கள் பெரும்பான்மை நீதியரசர்கள் இந்த வழக்கை நிராகரிக்கின்றோம்' என்றார். எனக்கு தூக்கி வாரிப் போட்டது. முதல் அனுபவம். உடனே 'அறிவித்தல் அனுப்பவேண்டும் என்று நான் கூறுவதையும் உங்கள் கட்டளையில் உள் நுழையுங்கள்' என்றேன். 'தேவையில்லை' என்றார் அவர். 'இல்லை தேவை! ஏனென்றால் யார் பெரும்பான்மையர் யார் சிறுபான்மையர் என்று கூறப்படவில்லை. உங்கள் தீர்மானத்திற்கு நான் ஒத்துடையவர் அல்லர்' என்றேன். கோபத்துடன் நான் கூறியதைத்தன் தீர்மானத்தில் பின்வருமாறு உள்ளடக்கினார் – 'நீதியரசர் விக்னேஸ்வரன் இதற்குஎதிர்' என்று.

இங்கு பொலிசார் செய்பவை சரியென்ற அரசு சார்பான அந்த நீதியரசர்களின் மனோ நிலையையே சுட்டிக்காட்டி வருகின்றேன்.

இவ்வாறான நீதியரசர்கள் பற்றிய பின்னணியை விவரித்துவிட்டு இப்பொழுது உங்கள் கேள்விக்கு வருகின்றேன்.

தற்போதைய பிரதம நீதியரசர் நளின் பெரேரா விரைவில் ஓய்வு பெற்றுச் செல்ல உள்ளார் என்று முன்னமே கூறினேன். வருபவர் அநேகமாகமேற்கூறியவாறான அரச சார்புப் பின்னணியைக் கொண்டவராகவே இருப்பார். அரச சட்டத்தரணிகள் அரசிற்காக சேவை செய்யும் போது அரசு சார்பான நாடாளுமன்ற அங்கத்தவர்கள், பிரதமர், ஜனாதிபதி போன்றவர்களின் கருத்துக்கு அமையவே சேவையாற்றுகின்றார்கள்.

பெரும்பான்மை இனத்தவரைக் கொண்ட அரசாங்க அங்கத்தவர்களின், போர்க்குற்றங்கள் பற்றிய கருத்தை ஏற்கனவே ஜனாதிபதியுடன் சேர்ந்து பலரும் கூறிவிட்டார்கள். 'எமது படையினர் தப்பேதும் செய்யவில்லை. அவர்கள் எந்தவித நீதிமுறைத் தண்டனைக்கும் உள்ளாவதற்கு நாங்கள் விடமாட்டோம்' என்று ஜனாதிபதியே கூறியுள்ளார். அதன் அர்த்தம் என்ன? 'எமது படையினர்' என்பதைக் கவனிக்க வேண்டும்.

தப்புசெய்தவர்கள் பலர் படையினருள் உள்ளார்கள். விசாரணைகள் ஏதும் செய்தறியாமலே அவர்கள் தப்பெதுவும் செய்யவில்லை என்று கூறுவதற்குக் காரணம்,அவர்கள் 'எமது படையினர்' என்பதால் தப்பேதும் செய்திருக்கமாட்டார்கள் என்பதே. இதுதான் ஜனாதிபதியின் வாதம். 'எமது படையினர்'! இவ்வாறான மனோநிலை கொண்ட அரசாங்கத்தினர் இருக்கும் போது அவ்வாறான அரசாங்கத்தினரைத் தமது தொழில் புரியும் காலத்தில் காப்பாற்றி வந்த நீதியரசர்களைக் கொண்ட உச்ச நீதிமன்றமோ வேறேதேனும் சிறப்பு நீதிமன்றங்களோ நீதியை நிலை நாட்டும் என்று எதிர்பார்க்கலாமா?

அண்மைய காலத்தில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்று வரும் போது நீதி நியாயத்திற்குப் பயந்து தீர்ப்புத் தருபவர்கள், இன ரீதியான விடயங்கள் எழும் போது நீதியை நிலை நாட்டுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சில காலத்திற்கு முன்னர் மூன்று சிங்கள சட்டத்தரணிகள் நூலொன்றில் இனத் துவேஷம் எந்த அளவுக்கு நீதித்துறையில் நர்த்தனம் ஆடுகின்றது என்பது பற்றிக் கூறியிருந்தார்கள்.

ஒரே மாதிரியான நிகழ்வுகளில் சிங்கள மக்களுக்கு ஒரு தீர்மானம் தமிழ் மக்களுக்கு வேறொரு தீர்மானம் கொடுத்திருந்ததைச் சுட்டிக்காட்டி இருந்தார்கள். ஆகவே சிங்கள அரசியல் வாதிகளிடையேஜனநாயகம்பற்றியபிணக்கு, அரசியல் யாப்பு பற்றிய பிணக்கு எழும்போது நீதியுடன் நடந்து கொள்ளும் நீதியரசர்கள் அல்லது நீதிபதிகள் இன ரீதியான அல்லது தமிழர் சம்பந்தப்பட்ட விடயங்கள் எழும் போது அல்லது 'எமது படையினர்' பற்றி எழும் போது நீதியை நிலை நாட்டுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களின் பின் னணி அதற்கு இடங்கொடுக்காது. ஆகவே யுத்த குற்றங்கள் சம்பந்தமாக நியாயத்தை எதிர்பார்த்தால் வெளிநாட்டு சட்டத்துறை அல்லது நீதித்துறை உள்நுழைவுகள் அவசியமே. *

# கூட்டமைப்பின் கையில் ஐ.தே.க. அரசின் 'குடுமி'

## ஜி.எல்.பீரிஸ் கடும் சீற்றம்



கொழும்பு, டிசெ. 17

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஒரு அரசைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டுப்படுத்தப் போகிறது என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர்,

பொதுத்தேர்தலை நடத்துவதை இலக்காகக் கொண்டு தான், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றார். அந்தப் பதவியில் நீண்ட நாள்கள் அமர்ந்திருப்பது அவரது நோக்கம் அல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ இணங்கவில்லை. அதனால் தான், அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்தனர்.

கூட்டமைப்பின் நிபந்தனைகளுக்கு இணங்கி அரசை அமைப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை.

இலங்கை வரலாற்றில் முதல்முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசைக் கட்டுப்படுத்தப் போகிறது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்குப் பெரும்பான்மை தேவை என்பதால், கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு ரணில் விக்கிரமசிங்க இணங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# 21 எம்.பிக்களின் முடிவு மைத்திரிபால அதிர்ச்சி!



கொழும்பு, டிசெ. 17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து தம்மால் எதிரணியில் அமரமுடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருடன் தனியாகப் பேசுவதற்காக கூட்டம் முடிவடைந்த பின்னரும் காத்திருந்தனர்.

எதிரணியில் அமர்வதால் எந்த அரசியல் எதிர்காலமும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை என சிறிசேனவிடம் தெரிவித்த அவர்கள், எதிரணியில் அமர்வதன் மூலம் நாங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கருத்துக்களையே பிரதிபலிக்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

அரசில் இணைந்து பணியாற்றுவதன் மூலம் மாத்திரமே கட்சியைப் பலப்படுத்த முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். அரசில் இணைந்தாலும் நாங்கள் உங்களுக்கு ஆதரவு வழங்குவோம் என அவர்கள் சிறிசேனவிடம் தெரிவித்தனர்.

இதற்கான வாய்ப்பு கிடைக்காத பட்சத்தில் சிறிசேனவுக்கு ஆதரவளிக்க முடியாத நிலையேற்படும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் வெளியிட்ட இந்த நிலைப்பாட்டினால் சிறிசேன அதிர்ச்சியடைந்தவராக காணப்பட்டார் எனினும் அது உங்களுடைய முடிவு என தெரிவித்தார்.

எனினும் புதிய அரசை அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்த உடன்படிக்கையையும் செய்து கொள்ளப் போவதில்லை என சிறிசேன மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ஐ)

# 'பிரதமராக அனுரகுமார திசநாயக்க' போலிச் செய்தியால் பெரும் பரபரப்பு

பிரதமராக அனுரகுமார திசநாயக்கவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார் என்று நேற்றுமுன்தினம் இரவு சமூக வலைத்தளங்களில் பரவிய போலிச் செய்தியால் குழப்பம் ஏற்பட்டது.

பி.பி.சி. சிங்கள சேவையின் செய்தியாளர் அஸாம் அமீனின் கீச்சகப் பதிவு போன்று, இந்தப் போலிச் செய்தி, சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டது.

ஊடகவியலாளர் அஸாம் அமீனின், கீச்சக முகப்புப் படத்தைப் பயன்படுத்தி இந்தப் போலிச் செய்தி வெளியாகியது.

எனினும், இது தனது கீச்சகப் பதிவில் இருந்து வெளியிடப்படவில்லை என்றும், இது போலியான செய்தி எனவும், அஸாம் அமீன் பதிவிட்டுள்ளார். (ஐ)




# தீவுப் படகுச் சேவைகள் கடும் காற்றினால் தடை

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கில் காற்றின் வேகம் அதிகரித்தமை காரணமாக நெடுந்தீவு – குறிகாட்டுவான் வரையான படகுச் சேவைகள் இரண்டு நாள்களாக இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு நிலை திருகோணமலைக் கடற்பரப்பிலிருந்து 540 கிலோ மீற்றர் தொலைவில் நேற்றுமுன்தினம் மாலை நிலைகொண்டிருந்தது. அது தமிழகத்தின் வடக்கு மற்றும் ஆந்திராவை நோக்கி நகர்கிறது.

இதனால் வடக்கு, வட மத்திய மாகாணங்கள் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடுத்த 24 மணித்தியாலயங்களுக்குக் காற்றின் வேகம் மணிக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றராக அதிகரித்துக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருந்தது.

இந்நிலையில் வடக்கில் கடந்த இரண்டு தினங்களாக காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் தீவுப் பகுதிப் படகுச் சேவைகள் இடம்பெறவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனால் தமது இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

இது தொடர்பில் நெடுந்தீவுப் பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

நெடுந்தீவு கடற்பரப்பை அண்டி காற்றின் வேகம் அதிகரித்துள்ளமையால் படகுச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடலின் கொந்தளிப்பும் சற்று அதிகமாக உள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைக்காக சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. – என்றார். (ஐ – 07)

# கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு சீருடை வவுச்சர்கள் கிடைத்தன

கிளிநொச்சி, டிசெ. 17

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான இலவசச் சீருடைகளும், காலணிகளும் வந்து சேர்ந்துள்ளன. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் நேரடியாகசென்று இவற்றைப்பெற்று வந்துள்ளார்.

15,644 மாணவர்களுக்கும், 15,956 மாணவிகளுக்குமாக 31,600 மாணவர்களுக்கான இலவசச் சீருடை வவுச்சர்களும், 20, 469 மாணவர்களுக்கான காலணிகளுக்கான வவுச்சர்களும் கிளிநொச்சி வலயத்திற்கு வந்துள்ளன.

இதில் 1200 ரூபா தொடக்கம் 1500 ரூபா வரையான பெறுமதிகளில் காலணிகளுக்கான வவுச்சர்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் நேரடியாக கொழும்புக்குச் சென்று பெற்று வந்துள்ளார். (ஐ)

# நத்தார் தினத்தை முன்னிட்டு அன்பளிப்புக்கள் வழங்கல்



கிளிநொச்சி, டிசெ. 17

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் கத்தோலிக்கத் திருச்சபையினதும், வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பினதும் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நத்தார் தினத்தை முன்னிட்டு அன்பளிப்புப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்ததுடன், வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்பளிப்புப் பொருள்களையும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தெரிவு செய்யப்பட்டிருந்த நோயாளர் விடுதியின் நோயாளர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலைக் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாகிகள், அருட்சகோதரர்கள், தாதியர்கள், வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

# புதுக்குடியிருப்பில் இருந்து மாடு கடத்திய இருவர் கைது!

முல்லைத்தீவு, டிசெ. 17

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து அனுமதியற்ற முறையில் பார ஊர்த்தி ஒன்றில் 5 பசுமாடுகள் மற்றும் ஒரு கன்றுக்குட்டி என்பன முல்லைத்தீவுப் பகுதிக்கு எடுத்து செல்ல முற்பட்டபோது இருவரைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

விசுவமடு, முத்துஐயன்கட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் பார ஊர்தியில் அனுமதியின்றி மாடுகளைக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பண்டார தலைமையிலான குழுவினர் இருவரையும் மாடுகளுடன் கைதுசெய்துள்ளார்கள். இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (ஐ)

# இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட்: நியூசிலாந்து 311 ஓட்டங்கள் சேர்ப்பு



இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்துள்ளது.

போட்டியில் தமது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி, 2 ஆம் நாள் முடிவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதனால் இலங்கை அணியை விட நியூசிலாந்து அணி 29 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கின்றது. அவ்வணி சார்பில் டொம் லேய்தம் ஆட்டமிழக்காமல் 121 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 91 ஓட்டங்களையும், ஜீத் ராவல் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பந்து வீச்சில் லஹிரு குமார மற்றும் தனஞ்சய டீ சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்களை வீழ்த்தியுள்ளனர்.

இதற்கு முன்னதாக இலங்கை அணி, தமது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் - மேற்கிந்திய தீவுகள் ரி - 20 போட்டியின் நேரம் மாற்றம்




பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக சில்ஹெட் மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது ரி – 20 போட்டியின் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

இந்த மைதானத்தின், பிளாஷ்லைட்க்கான மின்சாரம் செல்லும் கோபுரத்தில் உள்ள தொழில்நுட்பச் சிக்கல் காரணமாக இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன் காரணமாக ஏற்கனவே மாலை 5 மணிக்கு நடைபெறவிருந்த போட்டியை 2 மணிக்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிரிக்கெட் சபை அறிவித்தது.

மேலும் இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி – 20 போட்டி இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கௌதம் கம்பீருக்கு கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியில் முக்கிய பதவி!

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற கௌதம் கம்பீர், கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியின் பயிற்சியாளராக மைக் ஹசன் செயல்பட்டு வருகிறார். இவரது தலைமையில் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணி ஒருமுறை கூட வெற்றிபெறாத நிலையில், இவருக்குப் பதிலாக கம்பீர் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய அணியில் கடந்த 16 ஆண்டுகளாக இடம் பெற்று விளையாடிய கவுதம் கம்பீர், கடந்த வாரம் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இந்திய அணிக்காக 58 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கம்பீர் 9 சதங்கள், 22 அரை சதங்கள் அடங்கலாக 4,154 ஓட்டங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பும்ரா - புவனேஷ்வரை மட்டுமே நம்பி இருக்கிறோம்

புவனேஸ்வர் குமார் மற்றும் ஜஸ்பிரிட் பும்ரா ஆகிய இரண்டு பந்துவீச்சாளர்களை நாம் மிக அதிகம் நம்பியுள்ளோம். அவர்களை நோக்கியே ஒவ்வொரு டெஸ்ட் போட்டியிலும் கலந்து கொள்கிறோம் என முன்னாள் வீரர் வி.வி.எஸ். லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முன்னணி பந்து வீச்சாளர்கள் உபாதை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது துடுப்பாட்ட யுனிட்டை பற்றிக் கவலையில்லை. ஆனால் பந்து வீச்சு வலிமை இல்லாதது போல் உள்ளது.

பந்துவீச்சாளர்கள் சரியாகத்தான் உள்ளனர் சமீபத்தில் கூட ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 20 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆனால் ஒருநாள் போட்டியில் பார்க்கும்போது அவர்கள் இன்னும் தயாராகவில்லை. குறிப்பாக வேகப்பந்துவீச்சு கூட்டணி சற்று வலு குறைந்ததாக உள்ளது.

அருமையான சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர் மேலும் வேகப்பந்து வீச்சாளர்களில் புவனேஸ்வர் குமார் மற்றும் ஜஸ்பிரிட் பும்ரா ஆகிய இருவரை மட்டுமே அதிகமாக நம்பியுள்ளோம்.

அவர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டால் என்ன செய்வது. அவ்வளவு தான் இத்தோடு முடிந்துவிடும். இவர்களுக்கு இணையாக ஒருநாள் போட்டியில் பந்து வீச்சாளர்களைக் கண்டறிய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.





# சச்சினின் சாதனையை சமன் செய்த கோஹ்லி




ஆஸ்திரேலிய மண்ணில் 6 சதங்கள் அடித்த சச்சின் டெண்டுல்கரின் சாதனையை விராட் கோஹ்லி சமன் செய்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி, 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று இந்திய அணி சாதனை படைத்தது. இதையடுத்து, பேர்த் மைதானத்தில் 2 ஆவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செய்த ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 326 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது.

பின்னர், 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது. தொடக்கவீரர்கள் முரளி விஜய் ஓட்டம் எதனையும் எடுக்காமலும், ராகுல் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அதன்படி வெறும் 8 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இந்திய அணியை விராட் கோஹ்லி சரிவில் இருந்து மீட்டெடுத்தார்.

2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 181 பந்துகளைச் சந்தித்து 82 ஓட்டங்களுடன் விராட் கோஹ்லி ஆட்டமிழக்காமல் இருந்தார். 3ஆம் நாள் ஆட்டத்தில், விராட் கோஹ்லி 214 பந்துகளில் தனது 25ஆவது டெஸ்ட் சதத்தைப் பதிவு செய்தார்.

அத்துடன், ஆஸ்திரேலிய மண்ணில் அதிக சதங்கள் அடித்த இந்திய வீரராக இருந்த சச்சின் டெண்டுல்கரின் சாதனையை விராட் கோஹ்லி சமன் செய்தார். முன்னதாக, சச்சின் 6 சதங்கள் அடித்திருந்தார். தற்போது அவரின் சாதனையை விராட் கோஹ்லி சமன் செய் துள்ளார்.

கடந்த 70 ஆண்டுகளில் ஆஸ்திரேலிய மண்ணில் இவர்கள் இருவரைத் தவிர வேறு யாரும் 6 சதங்களை இதுவரை அடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) – நேற்றுக் காலை பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, அதற்கு முன்னர் தம்மைத் தேடிச் சந்திக்க தமது இல்லத்துக்குவந்தபோது அவரிடம் இப்படி நேரில் ஆலோசனை கூறினார் எதிர்க்கட்சித்தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிரதமர் பதவியை ஏற்க முன்னர், நேற்று முன்தினம் மாலையில் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந் தனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்குத் தேடிச் சென்று சந்தித்தார். சுமார் அரை மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் உட னிருந்தார்.

தமது ஐ.தே.மு. அரசில் சேர் வதற்கு சு.க. தரப்பிலிருந்து சில எம்.பிக்கள் விரும்புகின்றனர் என்ற தகவலை இந்தச் சந்திப் பின்போது சம்பந்தனுக்குத் தெரி யப்படுத்தியரணில், அதுதொடர்பில் கூட்டமைப்புத் தரப்பின் கருத்தை சம்பந்தனிடம் கேட்டார்.

ஐதேமு.அரசில் இணைவதற்கு வரும் அனைத்து எம். பிக்களையும் ஒருவரைக்கூட வெளியேவிடாமல் அரவணைத்துக் கொள்ளும்படி ஆலோசனை கூறிய சம்பந்தன், இந்த அரவணைப்பு தனித்துப் புதிய அரசமைப்பை நிறைவேற்றச் செய்யும் நோக்கத்துக்கானதாக இருக்க வேண்டும் என்றும் வலி யுறுத்தினார்.

அரசுக்குவெளியில் கூட்டமைப் பும் ஜே.வி.பியும் சேர்ந்து இருபது எம்.பிக்களைக் கொண்டிருக்கின் றன. புதிய அரசு, இனப்பிரச்சி னைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை நிறைவேற்றச் செய்வதற்குத் தேவையான நாடாளுமன்றப் பலத்தை பெறு வதற்காகத் தனது தரப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண் ணிக்கையை 130 ஆக அதிக ரிக்க முயல வேண்டும் என்றும் சம்பந்தன் இந்தச் சந்திப்பின் போது ரணிலிடம் வலியுறுத்திக் கூறினார் எனத் தெரிய வந் தது.

வடக்குகிழக்குத் தமிழர்களின் விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட சில முக்கிய அமைச்சுக்கள் தொடர்பில் நியமிக்கப்படக் கூடிய அமைச்சர்கள் விடயத்தில் தங்கள் எதிர்பார்ப்பையும் நிலைப்பாட்டை யும் சம்பந்தனும் சுமந்திரனும் இந்தச் சந்திப்பின் போது ரணி லிடம் வெளிப்படையாகவேவலியு றுத்திக் கூறினர் எனவும் அறிய வந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் சம்பந்தன் தரப்பின் கருத்தை அறிந்து, மனம்விட்டுப்பேசி, அமைச் சர் நியமனங்களை இணக்கமாக முன்னெடுக்கும் முயற்சியாகவே சம்பந்தனை அவர் இல்லம் தேடிச் சென்று ரணில் சந்தித்தார் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை ரணில் விக்கிரமசிங்க சந்தித்தார். அலரிமா ளிகையில் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியினரிடம் மேற் கொண்டவாறு கேட்டுக்கொண்டார்.

2019ஆம் ஆண்டு ஆரம்பத் தில் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகுங்கள் என்று பிரதமர் குறிப்பிட்டது ஜனாதிபதித் தேர்த லைத்தான் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தெரி வித்தனர். (ஐ)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி பால சிறிசேனவிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன் வைத் துள்ளார் எனத் தகவல்கள் தெரி விக்கின்றன.

ரணில் முன்வைத்த அமைச் சரவைப் பட்டியல் வருமாறு:-

1. ரணில் விக்கிரமசிங்க– பிரதமர், தேசிய கொள்கை மற் றும் பொருளாதார அபிவிருத்தி
2. காமினி ஜயவிக்ரம பெரேரா - வனவிலங்கு, சுற்றுலா, வயம்ப அபிவிருத்தி மற்றும் புத்த சாசனம்
3. மலிக் சமரவிக்ரம – சர்வ தேச வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு
4. திலக் மாரப்பான– வெளி நாட்டு அலுவல்கள்
5. ரவி கருணாநாயக்க – நிதி அமைச்சு
6. மங்கள சமரவீர – பெற் றோலியம் அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி
7. அகிலவிராஜ் காரியவசம் - கல்வி, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள்
8. லக்ஷ்மன் கிரியெல்ல – பொது நிறுவனங்கள் மற்றும் நகராட்சி வளர்ச்சி
9. வஜிர அபேவர்தன– பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலு வல்கள்
10. ராஜித சேனரத்ன – உடல் நலம், சுதேச மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து
11. ரவூப்ஹக்கீம்–துறைமுகங் கள், கப்பல் மற்றும் நீர் வழங்கல்
12. சம்பிக்க ரணவக்க – நகர அபிவிருத்தி மற்றும் நலன்புரி
13. ரிஷாத் பதியுதீன்– வர்த்தக, வாணிப மற்றும் தொழில்துறை அபிவிருத்தி
14. டி.எம். சுவாமிநாதன்– மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி
15. அர்ஜுன ரணதுங்க – விளையாட்டு
16. ஜோன் அமரதுங்க– வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கிறிஸ்தவ விவகாரங்கள்
17. துமிந்த திஸாநாயக்க – வேளாண்மை மற்றும் பெருந் தோட்டக் கைத்தொழில்
18. கபீர்ஹாசீம்– நெடுஞ்சாலை கள் மற்றும் சாலை மேம்பாடு
19. விஜித விஜயமுனிசொய்சா - மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி, கிராமப்புற பொருளா தார நடவடிக்கைகள்
20. ஏ.எச்.எம். பௌசி– போக்கு வரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து
21. பியசேன கமகே – மாகாண சபைகள்
22. கயந்த கருணதிலக – வெகுஜன ஊடக, நாடாளுமன்ற விவகாரம் மற்றும் தெற்கு அபி விருத்தி
23. சரத் பொன்சேகா– தொழி லாளர் மற்றும் தொழிற்கல்வி விவகாரங்கள்
24. தலதா அத்துக்கோரள – நீதி மற்றும் சிறைச்சாலை மறு வாழ்வு
25. ரஞ்சித் மத்தும பண்டார – உள்விவகார அமைச்சர், சட்டம் மற்றும் ஒழுங்கு
26. பழனி திகாம்பரம்– தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு
27. சஜித் பிரேமதாஸ– வீட மைப்பு, சமூக அதிகாரமளித்த ல் மற்றும் நலன்புரி
28. நவீன் திஸாநாயக்க – இளைஞர் விவகாரங்கள், திறன் கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் கல்வி பயிற்சி
29. ஹரின் பெர்னாண்டோ – தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு, ஊவா அபிவிருத்தி
30. மனோ கணேசன்– தேசிய ஒருங்கிணைப்பு, அதிகாரப்பூர்வ மொழிகள் மற்றும் நல்லிணக்கம். (ஐ)

## கூட்டமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி ஊடாக வென்றுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் அரி யணை ஏறுகின்றது. இதற்கு ஒத் துழைத்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களை யும் நாம் மறந்திடலாகாது. அவர் களுக்குக் கோடான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

–இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம் பாந்தோட்டை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றியமைக்கமைய ஐக்கிய தேசிய முன்னணி மீண் டும் ஆட்சிப்பீடம் ஏறியவுடன் புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தே தீரும். இனப்பிரச்சினையால் – ஆயுதப் போராட்டத்தால் மோச மாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்க ளுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்கியே தீரும். அந்தத் தீர்வு நாட்டின் மூவின மக்களும் ஏற்கும் தீர்வாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டுச் செய்தி நிறு வனம் ஒன்றின் இலங்கை செய்தி யாளருக்கு அளித்த பிரத்தியேக செவ்வியிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சூழ்ச்சி நடவடிக்கையால் அதிகாரத்துக்கு வந்தவர்கள் அதியுயர் சபையான நாடாளு மன்றத்தின் தீர்மானங்களை உதறி எறிந்துவிட்டு அராஜகம் புரிந்தார் கள். நீதிமன்றத்துக்கும் சவால் விடும் வகையில் அவர்கள் செயற் பட்டார்கள். ஆனால், மே ன்முறை யீட்டு நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் இவர்களுக்கு உரிய பாடம் புகட்டித் தீர்ப்பை வழங்கியுள்ளது.

அதிகார வெறிபிடித்தவர்களில் முக்கிய புள்ளியாக இருந்தவர் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை யடுத்து பதவியைத் துறந்துள்ளார். இனிமேலாவது இவர்கள் திருந்தி நடக்க வேண்டும்.

அரச அதிகாரத்தை பலவந்த மாகக் கைப்பற்றியதும் எதிர்த்தரப்பு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட் டது போன்று நாங்கள் தாக்குதல் நடத்தப்போவதில்லை. அரச மைப்பை அனைவரும் பாதுகாக்க வேண்டும் என்பதே தீர்ப்புக்கள் மூலம் கூறப்பட்டுள்ளது.

நாங்கள் நாட்டின் தற்காலிகப் பொறுப்பாளர்கள். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்த லின்போது எவரும் மாறலாம். நாம் சிறந்த முன்மாதிரியான அரசாகப் பயணிக்கத் தீர்மானித் துள்ளோம். இடம்பெற்ற தவறு களைப் புரிந்து கொண்டு சரியான பாதையில் பயணிக்கவுள்ளோம்– என்றார். (ஐ)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ந்து சுமார் 52 நாட்கள் அமைதி காத்து வந்த இந்தியா வின் மௌனம் தற்போது கலைந் துள்ளது. மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பதவியேற்ற பின்னர், இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை இந்தியா வரவேற்கின்றது என இந் திய வெளியுறவு அமைச்சு அறி வித்துள்ளது.

பல்வேறு தரப்பினரின் முதிர்ச் சியான போராட்டங்களின் விளைவால் இந்த மாற்றம் ஏற்பட் டிருக்கின்றது. இலங்கையுடன் இணைந்து ஒத்துழைத்துப் பணி யாற்ற இந்தியா தயாராக உள் ளது என இந்திய வெளியுறவு அமைச்சு மேலும் தெரிவித்துள் ளது. (ஐ)

## நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்துக்கொள்கின்றேன்.

– இவ்வாறு மீண்டும் பிரதமராக நேற்றுப் பதவியேற்ற ரணில் விக் கிரமசிங்க, அலரி மாளிகையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை யின்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

அரசியல் நெருக்கடி காரண மாக துரதிர்ஷ்டவசமாகச் சில வாரங்கள் நாடு மோசமடைந்துள் ளது. நாட்டின் இயல்பு நிலையை உடனடியாகச் சரி செய்வோம். இடைநிறுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் முன்னெடுப்போம். நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

முன்னைய ஆட்சியின்போது, நாடு எதிர்நோக்கிய பொருளாதார நிலையைச் சரி செய்வற்குக் கடந்த மூன்று வருடங்களாக மக் கள் பல கஷ்டங்களை எதிர்கொண் டனர். அதன் பலனை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டபோதே இந்தப் பிரச்சினை உருவானது. எனினும், இதை விட சிறந்த பொருளாதார நிலையை மக்களுக்குப் பெற்றுக் கொடுப் போம்– என்றார். (ஐ)

## குட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முதல் இரு மாதங்களுக்கான இடைக்கால நிதி ஒதுக்கீட்டு யோசனை எதிர்வரும் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசதுறையினருக்கான வேத னக் கொடுப்பனவுகள், அவசர மாக மேற்கொள்ளப் வேண்டிய கொள்வனவுகள், எரிபொருள் இறக்கு மதி மற்றும் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளுக்கு இத னூடாக நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது.

பின்னர் 2009ஆம் ஆண்டுக் கான முழுமையான வரவு – செலவுத்திட்ட யோசனையை முன்வைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செல்லமாட்டார்கள் என பஸில் ராஜ பக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மீகொட பகுதியில் நேற்று நடை பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு நம்பிகை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துக்கொள்ள வுள்ளனர் என வெளிவரும் செய்தி களில் எவ்வித உண்மையும் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி யினர் அவ்வாறு செய்யமாட் டார்களென ஜனாதிபதி மற்றும் மஹிந்த ராஜபக்ஷ – ஆகியோர் அறிவித்துள்ளனர். என்றும் பஸில் கூறினார்.

ஐதேகவிலிருந்து வெளியேறிய துனேஸ் எம்.பி., எஸ்.பி. நாவின்ன உட்பட நால்வர் மீண்டும் அந்தக் கட்சிக்குச் செல்லவுள்ளனர் என தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் மூன்றாவது தடவையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாகப் பிரிவில் ஓய்வுபெற்ற அதிகாரியான இவர், அந்தத் துறையில் 30 வருடங்கள் அனுபவமிக்கவரும் பேராதனைப் பல்கலைக்கழகத் தின் சமூகவிஞ்ஞானபாடம் தொடர் பில் விசேட பட்டதாரியுமாவார்.

அத்துடன் ஏக்கநாயக்க ஐக்கிய நாடுகள் அமைப்பின் வீட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் இலங்கையின் பிரதானியாக செயற்பட்டுள்ளதுடன், மலேசியா மற்றும் லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகங்களிலும் கடமை யாற்றியுள்ளார். (ஐ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி செயலகத்தில் முற் பகல் 11.16 மணியளவில், ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இந்தப் பதவி யேற்பு நிகழ்வு நடைபெற்றது.

பிரதமராகப் பதவியேற்பதற் காக, ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் 20 முக்கிய பிரமுகர்களுடனும் தனது பாரி யாருடனும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்றிருந்தார்.

பெரும் பரபரப்புக்கு மத்தியில் முற்பகல் 11.16 மணியளவில் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதவிப் பிர மாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பங்கேற்க ஊட கங்களுக்கு அனுமதி அளிக்கப்பட வில்லை.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக பெருமளவு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் திரண்டு நின்று ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவாக முழக்கம் எழுப்பினர்.

இலங்கையில் 5ஆவது தடவை யாகப் பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, அலரி மா ளிகைக்குத் திரும்பிச் சென்று நாட்டு மக்களுக்கு உரையாற்றி னார். (ஐ)

## வியாழேந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பதவியேற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் வியாழேந்திரன், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கத்தில் இணைந்து கொள்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்ததை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிலரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனும், கட்சி தாவி, அமைச்சர் பதவிகளைப் பெற்றி ருந்தனர்.

எனினும், நீதிமன்றத் தீர்ப்புகளி னால், அடுத்த சிலநாட்களிலேயே இவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகிக்க முடியாத நிலை ஏற் பட்டது.

மைத்திரி– மஹிந்த அரசு தோல்வி கண்டுள்ளதை அடுத்து, ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான புதிய அரசு அமைக்கப் படவுள்ளது.

இந்த நிலையில், முன்னதாகக் கட்சிதாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்ற, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜேதாஸ ராஜபக்ஷ, ஆனந்த அளுத்கமகே, துனேஸ் கங்கந்த, அசோக பிரி யந்த, எஸ்.பி நாவின்ன ஆகி யோரும், கூட்டமைப்பின் உறுப் பினரான வியாழேந்திரனும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள் ளனர்.

இவர்கள் புதிய அரசில் அமைச் சர்களாக இணைந்து கொள் வதற்கு, விருப்பம் வெளியிட்டுள் ளனர் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

மைத்திரி– மஹிந்த அரசில் இணைந்து கொண்ட பின்னர், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பையும், ரணில் விக்கிரமசிங்கவையும், வியாழேந்திரன் கடுமையாக விமர் சித்து வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# தமிழர்களை நிராகரித்தால் ஆட்சியைக் கலைப்போம்!

## கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 17

எமது மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காவிட்டால் ஆட்சியைக் கலைப்போம் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பெரிய கோமரசங்குளம் பரலோக மாதா ஆலய மண்டபத்தில் அருட்தந்தை செல்வநாதன் பீரிஸ் தலைமையில் நேற்று ஞாயிறுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றவகையில் செயற்படும் ஒரு கட்சி. அந்த வகையில் நாம் வெறும் கையோடு அல்லது வெறுமையான ஓர் ஆதரவைத் தெரிவித்திருக்க மாட்டோம் என்பது அனைவருக்கும் தெரியும்.



ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால் அதனை இராஜதந்திர முறையில் அணுக வேண்டும். எங்களது நாட்டிலே, குறிப்பாக வடக்கு – கிழக்கிலே, எங்களுடைய மக்கள் பல போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கும் அப்பால் அரசியல் தீர்வை மேற்கொள்ள வேண்டும் என்பது எமக்குப் பிரதான தேவையாக இருக்கின்றது.

அத்துடன் அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்பு என்பன எங்களது பிரதேசங்களில் மக்கள் கோரிக்கையாக எழுந்திருக்கின்றன.

வெறுமனவே பிரதமராக வருகின்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளித்து கையைக் கட்டிக்கொண்டு இருக்கின்ற ஒரு நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் இருக்காது.

தற்போதைய நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசுக்கு ஆதரவளித்திருக்கின்றது. புதிய அரசு தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக ஆதரவு வழங்கவேண்டும்.

எனினும் இந்த அரசு எமது மக்களுடைய கோரிக்கையைக் கவனத்தில் கொள்ளவில்லையாயின் இந்த அரசுக்கு நாங்கள் கொடுக்கும் ஆதரவை விலக்கிக் கொள்கின்றபோது இந்த அரசு கலைகின்ற அல்லது இல்லாமல் போகின்ற நிலைமை காணப்படும்.

அந்தச் சந்தர்ப்பத்தை நாமும் சரியாகப் பயன்படுத்தாமல் போனால் எமது மக்களுடைய பிரதிநிதிகளாகவோ எமது மக்களுடைய அபிலாஷைகளைத் தீர்க்கின்ற அமைப்பாகவோ இருக்க முடியாது என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன் – என்றார். (ஐ)


திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

இந்தியன் செலக்ஷனின்

நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

கொட்டன் டொப் (Top) - 1500/= 1000/=

டெனிம் டொப் (Top) - 1500/= 1000/=

2 in 1 சல்வார் துணி - 1500/= 1000/=

3 in 1 சல்வார் துணி - 2000/= 1500/=

கொட்டன் சல்வார் - 4000/= 2000/=

நெற் சல்வார் பெரியது - 5000/= 2000/=

நெற் சல்வார் சிறியது - 3500/= 1000/=

லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

1500/= பெறுமதியான பட்டுச் சாறி ஒன்றைகொள்வனவு செய்து 5000/= பெறுமதியான சாறி ஒன்றை இலவசமாகப் பெற்றிடுங்கள்.

கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சால்வார் துணிகள், சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

10% - 50% வரை விலைக்கழிவு

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்

காலம் : 14.12.2018 -31.12.2018 வரை


# மஹிந்தவைப் பிரதமராக்கி மைத்திரி சிறுபான்மைக்குத் துரோகம் செய்தார்

## முன்னாள் எம்.பி. பொன்.செல்வராசா காட்டம்



கொழும்பு, டிசெ. 17

சிறுபான்மையினரோடு முரண்பட்ட மஹிந்த ராஜபக்ஷவைப் பிரமராக்கியமை மைத்திரிபால சிறிசேன செய்த துரோகமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாடுகள் ஒரு நாட்டின் ஜனநாயக அரசியலைச் சீரழித்திருக்கின்றன. இதனால் நாட்டு மக்கள் பல இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள்.

19ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தவர், அதனை வெற்றி பெறச் செய்வதற்கு மிகவும் பாடுபட்டவர் ஜனாதிபதி மைத்திரிதான். அவருக்கு அதன் சட்டம் நன்றாகத் தெரியும்.

மக்கள் ஆணையால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கலைப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது. இந்த நாட்டின் அரசியல் சீரழிவால் ரணிலோ, மைத்திரியோ பாதிக்கப்படவில்லை.

இந்த நாட்டிலே ஒரு நல்ல நிலைமையைக் கொண்டு வருவதற்கு இறைவன் வழிவகுத்திருக்கின்றான். எனவே எதிர் வரும் காலங்களிலும் நியாயமான அரசு ஏற்பட வேண்டும் என்பதிலே மக்கள் கவனமாக இருந்து கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

# அரசமைப்பைக் காக்கும் போராட்டத்தில் வெற்றி!

## ரிஷாத் எம்.பி. பெருமிதம்

கொழும்பு, டிசெ. 17

நாட்டின் அரசமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகச் செயற்பட்டோம். அதில் இன்று வெற்றி கண்டுள்ளோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர், அலரி மாளிகையில் விசேட நிகழ்வொன்று இடம்பெற்றது. இதன்போது ரிஷாத் பதியுதீன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் கடந்த சில நாள்களாக இடம்பெற்ற செயற்பாடு அரசமைப்புக்கு முரணானது என்ற காரணத்தினாலேயே அதற்கெதிராக இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

புதிய பிரதமருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் – என்றார். (ஐ)


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை

கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்

பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.

நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.